தென்றல்

கிழமை இதழ்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்', சென்னை-6.

மலர் 7	சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, மாசி 28 (11-3-'61) சனிக்கிழமை	இதழ் 38

எதையாவது செய்வோம்

கடந்த 8-3-61-ம் நாள் தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டத்தில் சி. சுப்பிரமணியம் சில புள்ளி விவரங்களைக் கூறி இருக்கிறார்.

அதில், குறிப்பிடத்தக்கது உணவு உற்பத்திபற்றியதாகும்.

இந்தியத் துணைக்கண்ட முழுவதுமுள்ள உணவுப் பெருக்கப் புள்ளியில், தமிழ்நாடு மூன்றுவது இடத்தில் இருக்கிறதாம்!

சென்ற பத்து ஆண்டுகளில் 44·7 சத வீதம் தமிழ்நாட்டின் உணவு உற்பத்தி பெருகி இருக்கிறதாம்!

இராசத்தானம் முதலிடமும், பஞ்சாப்பு இரண்டாமிடமும் பெற்றுள்ளனவாம்.

அதாவது இராசத்தானம் 116 சத வீதமும் பஞ்சாப்பு 59 சத வீதமும் உணவுப் பெருக்கம் செய்துள்ளனவாம்.

இந்தப் புள்ளி விவரங்கள் எத்தனை அபத்தம் என்பதை சிறிதுஆராய்வோம்.

1943-ம் ஆண்டில் ஆங்கில ஆட்சி உணவுப் பங்கீட்டை அமுலுக்குக் கொண்டு வந்தது.

அப்போது ஆங்கில ஆட்சியாளர் கூறிய புள்ளி விவரங்களை இப்போது நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

தென்னாடு உணவு உற்பத்தியில் தேவையிலிருந்து 90 சத வீதம் பூர்த்தி செய்யத்தக்கதாயிருக்கிறது. பற்றாக் குறை பத்து சத வீதம்தான். ஆகவே, அதை சரிக் கட்டுவதற்காக உணவுப் பங்கீடு கொண்டு வருகிறோம்.

என்று ஆங்கில ஆட்சியாளர் கூறியுள்ளனர்.

இப்போது மந்திரி சுப்பிரமணியம் கூறுகிறபடி உணவுப் பெருக்கம் 44·7 சதமானம் கூடியிருந்தால் ஏறக்குறைய பழைய உற்பத்தியுடன் கூட்டி 130 சத வீதம் உணவு உற்பத்தியாகிறது என்று சொல்ல வேண்டும்.

அப்படியானால் தேவைக்கு மேல் சுமார் 30 சத வீதம் உபரியாக இருக்கிறது என்றே கொள்ள வேண்டும்.

உபரி உற்பத்தி 10 சதம் இருந்தாலும்கூட உணவுத் தட்டுப்பாடோ கள்ளச்சந்தையோ இருக்க நியாயமில்லை.

ஆனால், நாம் நடைமுறையில் என்ன காண்கிறோம்? ஒவ்வொரு ஆண்டிலும் மழைவளம் குறைந்தபோதெல்லாம், உணவுப்பண்டங்கள் தட்டுப்பாடு ஆவதும், அரசாங்கம் நாற்ற அரிசிக்கடை திறப்பதும் வழக்கமாகி இருக்கிறது.

மந்திரிகள் போகுமிடமெல்லாம் உணவு உற்பத்தியைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம் என்று சற்று பெருமையுடன் சொல்வதையும் பார்க்கிறோம்.

"உணவுப் பற்றாக் குறையை சரிக்கட்டவே குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம்" என்று கூறுவதையும் நாள்தோறும் கேட்டுக் கொண்டிருக்கிறோம்!

இது அத்தனையும் நடைமுறையில் காண்பது. ஆனால், புள்ளி விவரமோ உபரியாகக் காட்டப்படுகிறது! ஏன்?

1943-ல் இருந்த மக்கள் தொகை எவ்வளவு? இப்போதுள்ள மக்கள் தொகை எவ்வளவு? கூடிவரும் மக்கள் தொகையினால் உற்பத்தி தட்டுப்பாடு வரலாமல்லவா? என்று கேட்கலாம்.

அப்படியே மக்கட் பெருக்கத்தைக் கணக்கிட்டாலும், 1943-ல் இருந்ததைவிட இப்போது 20 சத வீதத்திற்குமேல் உயரவில்லை. ஆனால், உணவுப் பெருக்கமோ 44.7 சதம் உயர்ந்திருக்கிறது.

எந்த வகையில் பார்த்தாலும் உணவுத் தட்டுப்பாட்டுக்கோ, கள்ளச் சந்தைக்கோ, இடமில்லை என்று புள்ளி விவரம் காட்டுகிறது. நடைமுறை வேறு விதமாக இருக்கிறது!

இதுபோலவே, மக்களின் சராசரி வருமான உயர்விலுங்கூட தமிழ்நாடு இந்தியாவின் ஏனைய சில நாடுகளைவிட முன்னேறி இருக்கிறதாம்.

அதாவது இந்திய நாடுகள் வரிசையில் தமிழ்நாடு 4-வது இடத்தில் இருக்கிறதாம்!

அவ்வளவு வருமானம் இருந்தும், சோசலிச பாணி இருந்தும், தமிழர்களில் ஏழை எளியவர்கள் வாழமுடியாமல் புழுவாய்த் துடிக்கிறார்களே ஏன்? கூட்டம் கூட்டமாகத் தமிழர்கள் மட்டும் அயல்நாடுகளுக்கு கள்ளத்தோணிகளில் போவது ஏன்? வடஇந்திய நகரங்களில் தமிழர்கள் மட்டும் கூலிகளாய்த் திரிவானேன்? அதுபோல், தென்னாட்டு நகரங்களில் வடநாட்டார் எவரும் கூலிகளாய்த் திரியாதது ஏன்?

வடஇந்தியாவுக்கு சமமான பொருளாதார முன்னேற்றம் தொழில் முன்னேற்றம் பெற்றிருந்தால் தமிழ்மக்களுக்கு இந்தத்தாழ்வுநிலை வருமா?

புள்ளிவிவரம் பிரத்தியட்ச நிலைமையிலிருந்து இவ்வளவு மாறுப்பட்டிருப்பது எதனால்?

அமைச்சர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்களா? திட்டமிட்டு நாட்டு மக்களை ஏமாற்றுகிறார்களா? விளக்கம் தேவை.

ஆனால், திரு. சுப்பிரமணியம் பேச்சின் சாராம்சங்களை மொத்தமாக எடுத்து ஒப்புநோக்கி ஆராய்ந்தால், தெளிவற்ற கொள்கைகளும், தீர்க்கமில்லாத நடைமுறைகளும், சுயநலக்காரர்களின் தொல்லைகளுக்கேற்றபடி வளைந்து கொடுக்கும் பொறுப்பற்ற செயலும் சென்னை ஆட்சியில் வேரூன்றிக் கிடப்பதைக் காணலாம். இதோ சுப்பிரமணியம் பேச்சில் சில துளிகள்:

காங்கிரசுக் கட்சிக்குள் பலதரப்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. ஒரு சாரார் ரேஷனையும் சட்டபூர்வமான கட்டுப்பாட்டையும் விரும்புகின்றனர்,

கட்டுப்பாடு எதுவும் இல்லாத சுயேச்சையான வர்த்தகத்தை மற்றொரு பகுதியினர் விரும்புகின்றனர். சப்ளை, கிராக்கி நிலவரத்துக்கே இதனை விட்டுவிடவேண்டும் எனக் கருதுகின்றனர்,

மூன்றாவது கோஷ்டியினர் உணவுத்தானியங்கள் அத்யாவசிய பண்டங்கள் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றனர்.

மூன்றாவது கருத்தை சர்க்கார் ஆதரிக்கிறது. ஆனால், சர்க்கார் முயற்சிகளுக்கு இதுவரை வெற்றி கிடைக்கவில்லை.

இதுதான் சுப்பிரமணியத்தின் புலம்பல். இந்தப் புலம்பலில் ஊடுருவிக் கிடக்கும் கருத்து என்ன?

ஆட்சிக் கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டிருப்போரில்; கடந்த கால அனுபவங்கள்-நடைமுறை உண்மைகள்-நாட்டுநலம்ஆகியவற்றை எண்ணிப் பார்ப்பவர் இல்லை.

அவரவரும் சொந்த இலாப நஷ்ட நோக்கங்களையே கருத்திற்கொண்டு, ஆட்சி நடைமுறையை ஆட்டிப் படைக்க விரும்புகிறார்கள்.

அத்தகைய நிர்ப்பந்தங்களை ஆட்சி முனையிலிருப்போரால் தடுக்க-தவிர்க்கமுடியவில்லை.

எனவே, விலைக்கட்டுப்பாடு என்பது தோல்வி கண்டமுறை என்று தெளிவாகத் தெரிந்தும்-தீவர்த்தியைப் பிடித்துக் கொண்டு கிணற்றில்விழுவதைப் போல - எதையாவது செய்து கொண்டிருக்கவேண்டுமேளன்ற கருத்தில் ஆட்சி கைக்கொள்ள விரும்புகிறது.

-"மாசரா"

தியாகமா? துரோகமா?

வீ.ரா.சந்திரன்.

அகத்தின் சோகம் முகத்தில் இழைந்தோட, செல்வம் கல்லூரியை அடுத்து மிக உயர்ந்து வளர்ந்திருந்த வேப்ப மரத்தடியில் அமர்ந்திருந்தான். அப்போது காலை மணி 10.

கல்லூரி முதல் மணி அடித்து ஓய்ந்தது. நாட்டின் முதுகெலும்பு-தாயகத்தின் வலிமை மிக்கத் தூண்கள் என்றெல்லாம் அரசியல் வாதிகளால் அழைக்கப்படும் மாணவர்கள் தத்தம் வகுப்புகளை நோக்கிச் சென்றுகொண்டிருந்தனர். வானத்துத் தாரகைகள் மண்மீது விழுந்து விட்டனவோ என்று கூறும் படியாக மாணவியர் கூட்டம் பளபளக்கும் பட்டாடைகள் புனைந்து, தமக்கேயுரிய செம்மொழி பேசியவராய், அன்ன நடை பயின்று கொண்டிருந்தனர். இரண்டாவது மணியும் அடித்தது. அப்போதும் செல்வம் அசையவில்லை. சிலையாகி விட்டானா? இனிய தென்றலில் வேப்ப மரத்து இலைகள் சலசலத்தன. ஆனால் அவன் மனம் மட்டும் கனத்தது. மாணவப்பருவத்திலே அவனுக்கு என்ன கவலை வந்து விட்டது?

கிளிக்! கிளிக்! என்ற செருப்பொலி கேட்டது. அதுவும் அவன் மனத்தைக் கவரவில்லை.

"என்ன செல்வம்!... வகுப்பிற்குப் போகவில்லையா?..." அவன் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். அல்லி நின்றிருந்தாள். ஆம் அவனுடைய வகுப்புத் தோழி அல்லிதான் அங்கே பெண்மையின் எழிலையெல்லாம் தன் தங்க நிகர் மேனியிலே வழிய விட்டவளாய் நின்று கொண்டிருந்தாள். அவள் கரங்கள் 'ஆடம் ஸ்மித்தின் பொருளாதார விளக்கத்தைச் சுமந்து கொண்டிருந்தன.

"இல்லை அல்லி!...இன்று நான் வகுப்பிற்கு வரமுடியாது..."

"ஏன் செல்வம்?..."

அன்றலர்ந்த தாமரை போல் மலர்ந்திருந்த அவள் முகம் சற்றே கூம்பியது.

"கல்லூரிச் சம்பளம் கட்டாமல் வகுப்பிலே அடியெடுத்து வைக்கக் கூடாது என்று 'பிரின்சுபால்' அறிக்கை அனுப்பி விட்டார்!... இது தெரிந்தும் நான் வகுப்பிற்குள் நுழையலாமா?..."

அவன் குரலில் கம்பீரம் இல்லை. அவன் கண்கள் சற்றே கலங்கின. அவள் அதைக் காணாதவாறு தன் முகத்தை வேறு திக்கில் திருப்பிக் கொண்டான்.

"செல்வம்! இந்த விஷயத்தை எனக்கு ஏன் சொல்லவில்லை?... இரண்டு வருஷங்கள் என்னோடு பழகியும், என்னை நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ள வில்லையே! நண்பர் ஒருவரின் இடுக்கண் களையாத நட்பும் ஒரு நட்பா?"

இதைச் சொல்ல வெட்கப்பட்டேன் அல்லி.

"இதில் வெட்கம் என்ன?"

"இன்றுமாலை விடுதிப்பக்கம்வருவீர்களா?..."

எதற்கு? பணம் தரவா?" வேண்டாம் அல்லி!...இப்பொழுதே நம்மைப்பற்றி கல்லூரியில் ஒரு மாதிரியான பேச்சு. நான் உன் விடுதி பக்கம் தலைகாட்டினால் அவ்வளவுதான்!"

"செல்வம்! நம் மனத்தில் களங்கம் இல்லாதபோது நாம் ஏன் மற்றவர்களின் பேச்சைப் பற்றி கவலைப்பட வேண்டும்?...நீங்கள் வந்துதான் தீரவேண்டும்! என்ன சொல்கிறீர்கள்.

அவள் குரலில் தொனித்த உறுதி அவனைத் திடுக்கிட வைத்தது. என்ன சொல்லியும் விடாப் பிடியாகயிருக்கிறாளே!

"சரி முடிந்தால் வருகிறேன் அல்லி! என்றான் ஒருவாறு சமாளித்துக் கொண்டு.

"முடிந்தால்! அந்த சொல்லே வேண்டாம்! கட்டாயம் வரத்தான் வேண்டும்..."

"தங்கள் ஆணை!"

அவன் பணிந்தவன்போல்சொன்னான்.

"போதும் குறும்பு!...

மறுகணம் அவள் சிட்டாகப் பறந்தாள். அகமும் முகமும் மலர அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

செல்வம் சென்னை மாநிலக் கல்லூரியில் எம். ஏ. இரண்டாம் வருடம் படித்துக் கொண்டிருந்தான். ஏழைக் குடும்பத்துப் பையன். ஆனால் படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். அவன் தந்தை வடிவேலு ஒரு சாதாரண குமாஸ்தா. அவருடைய வருமானத்தை நம்பித்தான் அவனும் அவனுடைய தங்கையும் தாயும் வாழவேண்டும். பி, ஏ. முடிந்ததும் செல்வம் பணிதேட முயன்றான். ஆனால் அவன் தந்தை தடுத்தார். மேற்கொண்டு எம். ஏ. படிக்கத் தூண்டினார். அவனும் கிடைக்காத வசதிகளை எண்ணி ஏங்காது, கிடைத்ததைக் கொண்டு எபப்டியோ படித்துக் கொண்டு வந்தான். இன்னும் மூன்றே மாதங்கள்தான் இருந்தன அவன் எம். ஏ. இறுதித் தேர்வு எழுதுவதற்கு. அதற்குள் இந்த சோதனை! வாழ்வு சிலவேளைகளில் கசந்தாலும், கல்லூரிவாழ்க்கை அவனுக்கு மகிழ்ச்சியாய் இருந்தது. அதற்குக் காரணம்-பேராசிரியர்களின் கருத்தாழமிக்க விரிவுரைகள் மட்டுமல்ல! அல்லி என்ற அவனுடைய வகுப்புத் தோழியின் நட்பும் தான்! அல்லி கோவையில் பஞ்சாலை ஒன்றின் உரிமையாளரின் ஒரே புதல்வி. கல்லூரி விடுதியில் தங்கி படித்து வந்தாள். அவள் அழகை வெறும் வார்த்தைகளால் அளந்து விட முடியாது. அவள் கடைக்கண் பார்வைக்காக கல்லூரிக் காளையர் பலர் காத்திருந்தனர். ஆனால் அவள் பார்வை செல்வத்திற்காக ஏங்கியது. அவனும் அவளோடு கள்ளமில்லாமல்தான் பழகி வந்தான். ஆனால் நாளடைவில் அவர்கள் நட்பு காதலாக உருக் கொண்டது. அல்லியின் இதயத்திலே ஏழைச் செல்வம் புகுந்து கொண்டதை கல்லூரி மாணவர் பலர் விரும்பவில்லை.

காலச் சகடம் உருண்டது. மாதங்கள் மூன்று எப்படியோ ஓடிவிட்டன. செல்வமும் அல்லியும் எம்.ஏ. பட்டத்திற்கான இறுதித் தேர்வை எழுதிவிட்டனர். செல்வம் தனக்கு முதல் வகுப்பு நிச்சயம் என்று கூறிக் கொண்டிருந்தான். அல்லி தனக்கு முதல் வகுப்பு கிடைப்பது சந்தேகமே என்று செல்வத்திடம் குறைப்பட்டுக் கொண்டாள்.

அது, கடைசி வருட மானதால் மாணவர்கள் விருந்துகளும் நிழற்படமெடுத்தலும் நடத்தினர். எல்லாம் இனிதே முடிந்தன. மணவர்கள் கல்வி புகட்டி அன்பு காட்டிய தாயை விட்டுப் பிரிவது போல், கல்லூரியை விட்டுப் பிரிந்து சென்றனர் தத்தம் ஊர்களை நோக்கி அல்லியும் புறப்பட்டுக் கொண்டிருந்தாள். செல்வம் அவளுக்காக விடுதியில் காத்துக் கொண்டிருந்தான்.

இருவரும் வாடகை மோட்டாரில் ஏறி அமர்ந்து, சென்டிரல் புகை வண்டி நிலயம் அடைந்தனர். வண்டி புறப்பட இன்னும் பத்தே நிமிடங்கள்தான் இருந்தன. முதற் வகுப்புப் பெட்டியில் அல்லி அமர்ந்திருந்தாள். செல்வம் அவளுடைய வழிப் பயணத்திற்காக பழங்களும் ரொட்டிகளும் வாங்கி வந்தான். அவைகளை வாங்கி தன் பக்கத்திலே வைத்துவிட்டு, அவள் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"கொச்சின் எக்ஸ்பிரஸ் இன்னும் சில நிமிடங்களில் புறப்படும் திடீரென்று நிலைய ஒலி பெருக்கி அலறியது.

"அல்லி! என்னை மறந்து விடுவாயா?

"இந்த யுகத்திலா? இதென்ன கேள்வி?

"உன்னை நம்பலாமா?"

"உங்கள் உள்ளத்தை நீங்கள் நம்பவில்லையா?..."

"கல்லூரியில் மலர்ந்த காதல் கண நேரத்தில் தோன்றி மறையும் மின்னல் போன்றது என்று சொல்வார்களே!"

"அவர்கள் நம்மைப் பார்த்துச் சொல்லவில்லையே!"

"பஞ்சாலை முதலாளியின் ஒரே மகள் நீ!"

"அதனால் என்ன?"

"நான் ஏழை; குடிசையில் முடங்கிக் கிடப்பவன்!"

"இருக்கட்டுமே!..."

"நீ ஊருக்குப் போனதும் மாளிகை வாசத்தின் பகட்டான வாழ்க்கையில்-மயங்கி என்னை மறந்து விடுவாய்!"

"செல்வம்!... என் இதய வேதனை உங்களுக்குத் தெரியாது. அல்லி கிளைக்குக் கிளை தாவும் மந்தி அல்ல! கிடைத்ததையே விடாமல் பற்றிக் கொள்ளும் உடும்பு! ஆம். காதல் உடும்பு!"

நான் மட்டுமென்ன?...வாழ்ந்தால்......இல்லையேல் உன் நினைவால் அணு அணுவாய் மடிவேன்!'

அவன் குரல் கம்மியது. விழிகளில் நீர்த் திவலைகள் பெருக்கெடுத்தது பிரிவு அவன் நெஞ்சைப் பிழிந்தெடுத்தது அவள் மட்டும் இதற்கு விதிவிலக்கா? மலர்க் கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள். யாரை யார்தேற்றுவது என்று தெரியாமல் இருவரும் கலங்கிக் கொண்டிருக்கையில் வண்டி புறப்படுவதற்கான மணி அடிக்கப் பட்டது! கார்டு விசில் ஊதினார்!...சோ! என்ற இரைச்சலோடு புகைவண்டி புறப்பட்டது.

"போய் வருகிறேன், செல்வம்!"

அவள் நா குழறக் கூறினாள்.

"போய் வா! என்று வாயால் கூறாது, அவன் தன்கைகளை ஆட்டி விடை கொடுத்தான்.

நாட்கள் வாரங்களாகி, வாரங்கள் மாதங்களாயின. அல்லி கோவைக்குச் சென்று மூன்றுமாதங்களாகியும் ஒரு கடிதமும் போடவில்லை. செல்வம் எழுதிய கடிதங்களுக்கும் பதில் வரவில்லை. இதற்கிடையில் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன. இருவரும் முதற் வகுப்பில் தேர்வு பெற்றிருந்தனர்' அதைப் பாராட்டி ஒரு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தான். அதற்கும் பதிலில்லை! பட்டமளிப்பு விழாவிற்காவது வரமாட்டாளா என்று ஏங்கினான். என்ன ஏமாற்றம்! அதற்கும் வரவில்லை! ஒருவேளை அவள் உடல்நிலை சரியில்லையோ? ஐயோ!...அல்லி உனக்கு என்ன வந்துவிட்டது?" இப்படி எண்ணி மனம் புழுங்கிய அவனுக்கு அன்று ஒரு கடிதம் வந்தது. அல்லிதான் எழுதியிருந்தாள். மனத்தில் மகிழ்ச்சி துள்ள அவசர அவசரமாய்ப் பிரித்தான்.

செல்வத்திற்கு,

என்னை மன்னித்து விடுங்கள். நான் உங்களை நன்றாக ஏமாற்றி விட்டேன். 'கல்லூரியில் மலர்ந்த காதல் கணநேரத்தில் தோன்றி மறையும் மின்னலைப் போன்றது என்று நீங்கள் கூறியதை, நான் அப்போது உணரவில்லை. இப்போது உணர்ந்து விட்டேன். காதல் என்பதை இலக்கியத்தில் தான் படித்து மகிழ முடியும் வாழ்க்கையில் அனுபவிக்க முடியாது. நானோ செல்வந்தரின் செல்வப் புதல்வி, நீங்களோ மண் குடிசை வாசி! நாமிருவரும் எப்படி கருத்தொருமித்து வாழ்க்கை நடத்த முடியும்? எனவேதான் உங்களை மறப்பதென்று முடிவு செய்து விட்டேன்! இந்த ஏமாற்றம் உங்களுக்கு அதிர்ச்சியைத் தரலாம். என்ன செய்வது? உங்கள் தரத்திற்கு ஏற்ற ஒருத்தியை மணந்து கொண்டு வாழ்க்கை நடத்துங்கள்.

உங்களை மறந்துவிட்ட,

அல்லி'

கடிதத்தைப் படித்து முடித்த அவன் குமுறும் எரிமலையானான். அக்கடிதத்தைச் சுக்குநூறாய்க் கிழித்தெறிந்தான். வஞ்சகி!...மோசக்காரி! ஏமாற்றுக்காரி! பணத்திமிர் அவளை இப்படி எழுதத் தூண்டி விட்டது. 'உங்கள் தரத்திற்கு ஏற்ற ஒருத்தியை மணந்து கொள்ளுங்கள்' என்று எனக்கு புத்தி கூற இவளுக்கு என்ன துணிச்சல்! சே! இந்த பெண் வர்க்கமே இப்படித்தானா? வஞ்சகத்தின் பிரதிபிம்பங்கள்!... அவன் மனம் புழுங்கினான். 'காதலாம் காதல்! ஏமாற்றுக்காரி ஏய்த்து விட்டாள்! அவன் சிந்தை நொந்தான்.

காலம் அவன் மனப்புண்ணை ஆற்றியது. அவன் நெஞ்சில் நிறைந்திருந்த காதல் நினைவு நீர் மேல் எழுத்தானது. அல்லியை மறந்தான். கோகிலம் என்பாளைக் கைப்பிடித்தான். அதோ ... தத்தித் தத்தி நடக்கிறானே அவன்தான் செல்வத்தின் புதல்வன் அறிவொளி! ஆம். அவன் இன்று ஒரு மழலைச் செல்வத்தின் தந்தை!

அன்று ஞாயிற்றுக் கிழமை. காரியாலய விடுமுறை நாள். செல்வம் தன் மனைவியோடு கடற்கரைக்குச் செல்ல திட்ட மிட்டிருந்தான். அவள் தனக்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி, வீட்டிலேயே தங்கிவிட்டாள். அவன் மட்டும் வெறுப்போடு கடற்கரைக்குச் சென்றான். கரையோரத்தில் கால்களை நீரில் நனைய விட்டவனாய் நின்று கொண்டிருந்த அவன் மனத்தில் பழைய நினைவுகள் பளிச்சிட்டன. கல்லூரியில் அவன் படித்துக் கொண்டிருந்த போது அல்லியோடு கொண்டிருந்த காதல்—அவனும் அவளும் மாலை வேளைகளில் கடற்கரைக்கு வந்து, அலைகளின் பேரிரைச்சலுக்கும் செவிசாய்க்காமல் பேசிக் கொண்டிருந்தது - பின்பு

(11-ம் பக்கம் பார்க்க)

"போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 7 | 11-3-'61 | இதழ் 38

நம்பிக்கை ஒளி

திராவிட முன்னேற்றக் கழகத்தின் கடந்த 12 ஆண்டுகால வரலாற்றை-அது கடந்து வந்த இடர்மிகுந்த வழிகளை-ஒரு முறை திரும்பிப் பார்த்துக்கொள்வது, பயன்மிக்க செயல் ஆகும்.

தொடக்க நாட்களில், பொதுமக்கள் மத்தியில், அதற்கொரு செல்வாக்கு அரும்பி இருப்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

செல்வாக்கு என்பது ஒரு முனையாக இருப்பதில்லை. ஒருபுறம் ஆதரவு, இன்னொரு புறம் எதிர்ப்பு, ஆகிய இரு முனைகளும் கூடியதே செல்வாக்கின் முழுத் தன்மையாகும். இதுவே நியதி.

இந்த நியதி, அரசியல் இயக்கத்திற்கு மட்டுமல்ல-செல்வாக்கு என்று அழைக்கப்படும் எந்தக் காரியத்திற்கும் பொதுவானது. இந்த நியதியின்படி தி மு. க செல்வாக்கு-எதிர்ப்பு இரண்டையும் பெற்றிருந்தது-பெற்றிருக்கிறது.

ஆனால், செல்வாக்கு தெருவில் இருந்தது, எதிர்ப்பு, ஆட்சி பீடத்தில் இருந்தது.

ஆதரவு குடிசைகளில் இருந்தது. எதிர்ப்பு, மாளிகைகளில் இருந்தது

அதனால், செல்வாக்கு விளம்பரமாகவில்லை. எதிர்ப்பு விளம்பரமாகி இருந்தது.

எதிர்ப்பவர்கள் பெரிய மனிதர்கள்-பிரபலமானவர்கள் என்று பெயர் பெற்றிருந்தார்கள்.

ஆதரிப்பவர்கள். சாமான்யர்கள்-சிறுவர்கள்-என்று பெயர் பெற்றிருந்தார்கள்,

நாட்டின் பொதுமக்களில் மிகப் பலர், எதையும், சிந்திக்க முடியாதவர்களாகவோ, சிந்தனை சிறிது காலத்திற்குமட்டும்தான்-பிறகு சிந்திக்க வேண்டியதில்லை என்று முடிவு கட்டியவர்களாகவோ இருப்பது இயற்கை.

இதனால் பொதுமக்களிடம் நம்பிக்கை ஒன்றே நிலையாக ஆட்சி புரிந்து வரும்.

இப்படி நம்பிக்கை அடிப் படையிலேயே எல்லாவற்றையும் ஏற்றுக் கொண்டு வரும் பண்பு எல்லா நாட்டினர்க்கும் பொதுவானதுதான். ஆனால், நமது நாட்டில்-திராவிடத்தில் ஒன்றை நம்புவதற்கும் நாளாகும்: அப்படி நம்பிய ஒன்றைக் கைவிடவோ மிக நீண்ட நாட்களாகும்.

இத்தகைய நாட்டில் சரியான பத்திரிகை பலமின்றி-பணப் பலமின்றி கழகத்தைத் துவக்கினோம். நமக்கிருந்த ஒரே மூலதனம், ஒன்றே ஒன்று. அது தான், உண்மையே உருவான கொள்கை! இங்குள்ளவர்களோ;

அயல் நாட்டுத் தலைவர்களையே தன்னாட்டுத் தலைவர்கள் என்று கூறினார்கள்-கூறுகிறார்கள்!

ஒரு துணைக் கண்டத்தையே ஒரே நாடு என்று கூறினார்கள்-கூறுகிறார்கள்!

ஒரு அந்நிய மொழியையே தேசிய மொழி என்று கூறினார்கள்-கூறுகிறார்கள்!

வரி செலுத்திக்கொண்டிருப்பதையே சுதந்திரம் என்று கூறினார்கள்-கூறுகிறார்கள்!

வடநாட்டு அடியார்கள்-ஏஜண்டுகளையே இந்நாட்டு அமைச்சர்கள் என்று கூறினார்கள்-கூறுகிறார்கள்!

விலை கொடுத்து ஓட்டு வாங்குவதையே தேர்தல் என்று கூறினார்கள்-கூறுகிறார்கள்!

இப்படி அரசியல் அடிப்படையை-அ. ஆ அரிச்சுவடியைத் தலைகீழாக மாற்றிப் பேசினார்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

தி. மு. கவின் தொடக்க நாட்களில் அரசியல் அடிப்படையைப் போதிப்பதற்கு முன்னால் தகிடுதத்தப் பிரசாரங்களையும் விளக்கிச் சொல்ல வேண்டிய நிலையிருந்தது.

காந்தியாரும் நேருவும் மற்றவர்களும் அயல்நாட்டுத் தலைவர்கள் என்பதை மக்களுக்கு உணர்த்தினோம்—உணர்த்துகிறோம்!

இந்தியா என்பது ஒரு நாடல்ல—துணைக்கண்டம் என்று விளக்கினோம்—விளக்குகிறோம்.

இந்தி என்பது ஆங்கிலம்போன்ற ஓர் அந்நிய மொழிதான் என்று விளக்கினோம்—விளக்குகிறோம்.

சுதந்திரம் என்பது வரி செலுத்துவது மட்டுமல்ல பயன் பெறுவதும் சேர்ந்தது என்று தெளிவுபடுத்தினோம்—தெளிவுபடுத்துகிறோம்!

காங்கிரசு என்பது வடநாட்டு அடியார்கள்—ஏஜண்டுகள் கூட்டம் என்பதை அறிவித்தோம்—அறிவிக்கிறோம்!

தேர்தல் என்பது ஓட்டுகளை விலைக்கு விற்பதல்ல—உண்மை ஊழியன் ஒருவனை ஏற்படுத்துவதுதான் தேர்தல்—ஊழியன் என்பவன் சில்லறைக் காசும் கொடுத்து ஊழியம் செய்ய வரமாட்டான். அப்படி எவனாவது வந்தால், அவன் வீட்டில் உள்ளதைச் சுருட்டிக் கொண்டு போகிறவனாகத்தான் இருப்பான் என்று தேர்தல் முறைகளை விளக்கினோம்—விளக்கி வருகினோம்!

இத்தனையும் சொல்லச் சொல்ல தெளிவுபடுத்தத் தெளிவுபடுத்த, கற்றவர்கள்—கல்லூரி மாணவர்கள் ஆகியோர் நாம் கூறுவதைச் செவிமடுத்தனர்.

அதன் பிறகு, கல்லாவிடினும் உலகியல் அறிவும் நீதி நியாய உணர்வும் பெற்ற நல்லவர்கள் அனைவரும் நமது கருத்துக்களைக் காதில் வாங்கி நெஞ்சில் இருத்தினார்கள்.

இயக்கம் கருவாகி—உருவாகி—காளையாகி வளர்ந்தது வளர்ந்து கொண்டே இருக்கிறது.

இயக்கத்தின்பால் மக்களின் கவனத்தை விரைவில் திருப்பிய கவிஞர்கள்' கலைஞர்கள், நடிப்பிசைப் புலவர்கள், மருத்துவர்கள், வழக்கறிஞர்கள், வணிகக் கோமான்கள், உழவர் பெருமக்கள் நெசவாளர்கள் பாட்டாளிகள் ஆகியோரால் ஏனையோரும் நெருக்கியடித்துக் கொண்டு குவிகிறார்கள்.

இந்த இயக்கம்—தி. மு. க—வளர்ந்தால்—திராவிடர்கள் உண்மையான தேசிய உணர்ச்சியும் அரசியல் அறிவும் பெற்றால்-அது வடவர் ஆதிக்கத்திற்கும் அதன் சார்பில் பெரிய மனிதராக உலவிவரும் தென்னாட்டு அடியார்களுக்கும் தான் ஆபத்து என்பதைப் புரிந்து கொண்டிருக்கிறவர்கள்—

நீண்ட காலமாக திராவிட முன்னேற்றக் கழகம்—தி. மு. க என்ற சொற்களையே குறிப்பிட மறுத்தார்கள். எழுத்தாலும் பேச்சாலும் நம்மை ஒரு சிறு கூட்டம் என்றே குறிப்பிட்டு அலட்சியம் செய்ததை மறக்க முடியாது.

இப்போது அப்படி மூடி மறைக்க முடியவில்லை.

இந்தியாவை ஒரே நாடு என்று கட்டுப்பாடாகக் கூறியவர்கள் இப்போது அவ்வாறு துணிச்சலாகக் கூற முடியவில்லை. சுதி குறைந்து விட்டது.

இந்தி தேசிய மொழியென்று நாக் கூசாமல் பேசியவர்கள் அல்ல அல்ல பொது மொழி என்கிறார்கள்: சுதி குறைந்ததுதான் என்றாலும், புலி பதுங்குகிற முறையே இது.

இப்படி எத்தனையோ மாற்றங்களைக் கண்டு வருகிறோம்.

ஆயினும், இவையெல்லாம் நமது எல்லையை நோக்கிச் செல்வதற்கு உற்சாகமாகக் கொள்ளலாமே தவிர, எல்லை இன்னும் நெடுந்தொலைவில் இருக்கிறது-ஆயினும், நம்பிக்கை ஒளி வீசுகிறது.

நம்முடைய ஒவ்வொரு அசைவுக்கும் மக்கள் பொருள் கண்டுபிடிக்கும் அளவுக்கு நாம் வந்து விட்டோம்—கவனிக்கப்படுகிறோம்.

ஆதலால் நம்முடைய ஒவ்வொரு செயலையும் நன்காராய்ந்து செய்ய வேண்டிய பெரும் பொறுப்பில் இருக்கிறோம்.

பொறுப்புணர்ந்து செயலாற்றுவோமாக.

எம். எஸ். இராமசாமி

வெண்பாப் போட்டி 15.

★

சென்ற இதழில் வெளியிட்டிருந்த ஈற்றடி "சென்டாக வந்த செருப்பு" கைவிடப்பட்டது.

அதற்குப் பதிலாக 'வேலூர்' என்று தொடங்கி திருவொற்றியூர் என்று முடிக்க.

மாதிரி

வேலூர்.......................................
.............................——.................
....
.................திருவொற்றி யூர்.

இறுதி நாள் 18-3-61.

தென்றல் வெண்பாப் போட்டி : : சென்னை-6

மதுரை எழுத்தாளர் மன்ற மூன்றாவது ஆண்டுக் கவியரங்கம்

கவியரங்கத் தலைவர்

கண்ணதாசன்

முன்னுரை.

சிவனடியான் சிவனடியான் என்கின் ருரே !
சிவனுக்கோ இவனடியான் ? இல்லை ! இல்லை !
இவனறியும் தமிழுள்ளம் சிவனுக் கில்லை !
இவனுக்கே சிவனடியான் ! முக்கண் காட்டி
அவனெதிரே வந்தாலும் தமிழ்ப்பி ரம்பால்
அடிப்பான் !அவ் வடியெல்லாம் தமிழ்மு ழக்கம்
சிவனடியான் இவ்வகையில் தெற்கைப் பற்றித்
திறமான கவியாத்துச் செவிவ டிப்பான் !

பெரி. சிவனடியான்

தெற்கு

தெற்குக் குரியவிளந் தென்றலே ! நீவருக !
பற்று மிகுந்துதமிழ்ப் பாடலையும் சேர்த்திங்கே
காற்ருடி சுற்றித்தான் காற்றுவர வேண்டுமெனும்
நாற்சுவருட் கொட்டகையில் நற்றென்ருல்! வீசுவதேன் ?
விற்புருவக் கன்னியரை விட்டுவந்த காளையர்கள்
நிற்காமல் ஓடும் நினைப்பதனைக் கொள்வதற்கோ !
கற்றவர்கள் நூலகத்துக் காதலியைக் கண்ணுற்று
நெற்றி வியர்த்து நெடுமூச்சுக் கொள்வதற்கோ !
முற்றியவர் நெஞ்சடைத்து மூர்ச்சை யடைவதற்கோ !
எற்றுக்கு நீவந்தாய் ? எம்"தென்றல்" நீர்வாழ்க !
திக்குகளைப் பாடித் திளைத்த கவிஞர்காள் !
மக்கள்மன் றம்திறக்க வந்தவெள் ளைச்சாமி !
ஔவை துரையே ! அழகுதமிழ்க் கோமானே !
செவ்வி குளிரவந்த செல்வன்சொல் சம்பத்தே !
மங்கை குலமும் மறையவில்லை யென்பதனை
இங்குவந்து சொல்ல எழுந்த திருமதிகாள் !
மன்றத் திளைஞரே ! மற்றுமுள்ள தென்புலத்தீர் !
அன்பு வணக்கம் அனைவருக்கும் சொல்கின்றேன்.
கூட லரசன் குறட்கழகத் தார்மூலம்
பாடல் எழுதப் பணித்தார் எனைநோக்கிப்
பாட்டெழுத எண்ணுங்கால் பைந்தொடியாள் முன்வந்து
கூட்டத்தார் பாடக் கொடுத்த பொருளென்ன ?
கூறுங்கள் என்ருள், குமரி "தெற்கெ"ன்றேனே
நூறுமுறை சொல்லி நொடிப்பொழுதில் ஆக்குங்கள்.
தெற்கின் சிறப்பெல்லாம் தேர்ந்தெடுத்துப் பாடுங்கள்
பொற்காலந் தெற்குக்காம் போமென்ருள், ஆமென்றேன்
கற்காலந் தொட்டுக் கவினுலக நாள்முதலாய்த்
தெற்கே முதற்கண் தெரியும் வரலாற்றில்
பிற்காலம் வந்த பிறதிசையார் செய்சதியால்
விற்ருர்கள் தம்மை விழியிழந்த தென்னுட்டார்.
கற்ருர்கள் பாடம் கருத்திழந்த நேரத்தில்
பெற்ருர்கள் மானம் பெரியார் முதற்குரலில்
தந்தை பெரியார் தனையன்மா ரைவெறுத்து
நிந்தித்த போதும் நினைத்தல் நமக்குரிமை
நாற்றிசையில் தென்திசையை நான்பாட வந்தவுடன்
வேற்றவராய் மூவர் விழிக்கின்ருர், மூவரிலும்
தெற்கின் எதிர்த்திசையாய்த் தெரியும் தமிழண்ணல்
கற்றூக்கி வந்த கனகன்போற் சீறுகின்ருர்
சீறி வடபுகழைச் சித்தரிக்க எண்ணிடினும்
மீறி வருவதெலாம் வீழ்ந்த பழங்கதைதான்
இல்லையா சொல்வீர் ! எதற்கு நமக்கிந்தத்
தொல்லையே, நம்திசையைச் சொல்லிடுவோம், ஆனுலும்
பாட்டி வடக்கே படுக்காதே என்பாளே !
கேட்ட கதைபொய், கிடைக்கும் பொருள்சரியே.
உன்னை மறந்தே உறங்குகின்ற நேரத்தும்
சென்னி தனைவடக்கே சாய்க்காதே தாழ்மையது.
வீழ்ந்து வணங்கும் விதமாய் அமையுமஃதே
ஆழ்ந்த கருத்திதுவாய் ஆக்குதலிற் குற்றமுண்டோ !
தாழ்ந்து பணியாப் பரம்பரையில் தற்காலம்
வீழ்ந்தே கிடக்கும் விதந்தெரிந்தார், ஓர்சாரார்
சூழ்ந்துதம் தோள்களிலே தூக்குகின்ருர் காவடியை ?
வாழ்த்தி வடமலையான் வாசலுக்கே ஓடுகின்ருர்
இந்த நிலைமாற்ற ஏகும் அணிவகுப்பு
முந்தி நடந்து முடிசூடல் அட்டியில்லை.

மொழிவளம்

தெற்கின் புகழ்பாடும் செந்தமிழே ! நீயுலகின்
நற்ருய் எனக்கற்றோர் நாவாரப் பாடுகின்ருர்
மக்கள் இனமெல்லாம் மானிலத்தில் தோன்றுதற்கே
தக்க இடந்தெற்காய்த் தானெழுந்த தென்கின்ருர்
போதுமா ? தாயேயுன் பொன்ருப் புகழ்விரிப்பின்
நீதிவாழ் தெற்கின் நிலைகூற நெரமிலை.
நல்லார் மறைமலையும் யாழ்வல் விபுலாவும்
சொல்லாடும் நாடகத்துச் சுந்தரமும் தெற்கே.
இயலும் இசையும் இணைந்தபெருங் கூத்தும்
நயத்தாற் சிறந்த நடனமும் நம்சொத்தே.

இயற்கைவளம்

விந்தியமும் தெற்கு, விரியும் தொடர்மலைகள்
பந்திவைத் தாற்போல் பரவுவதும் தெற்கேதான்
காவிரியும் தென்பெண்ணைக் கரையேறும் தண்ணீரும்
மேவிச் செழித்துவளம் மிக்கதுவும் தெற்கேதான்
கூவி மதுரையே கோவென்று தான்கதறத்
தாவிவந்த தண்ணீர் தணிந்ததுவும் இங்கேதான்
நெற்கோட்டை கட்டும் நெடுந்தஞ்சைச் சோணுடும்
பொற்றமிழ்ப்பா கட்டும் புகழ்மதுரைப் பட்டணமும்

கலைவளம்

உலகக் கலைஞரெலாம் ஒன்று திரண்டாலும்
மலையைக் குடைந்தகுகை மாமல்லக் கோயில்தனை
பாரிற் சமைப்பாரோ ! பார்த்துமகிழ் மேல்நாட்டார்
பூரித்துப் போகின்ருர் போற்றுகின்ருர் தென்கலையை
பல்லவரை நல்லகலை வல்லவரைப் பார்ப்பதினி
ஒல்லுமோ என்றெண்ணின் உள்ளம் வதைபடுதே.
தென்மதுரை மீனுள் திருக்கோயில் தானென்ன !
பொன்னிபாய் தஞ்சைப் பெருங்கோயில் தானென்ன !
இன்னும் பலவுண்டே எத்தனைதான் சொல்லிடலாம்
ஒன்றுநான் சொல்வேன் உயிரைக் கலைக்கே
உவந்தளித்தார் காணிக்கை, ஊணுறக்கம் இன்றிக்
கவரும் கலைத்துறைக்கே காலமெலாம் தாம்கழித்தார்
ஆண்டவனை நோக்கவழி அங்கில்லை என்ருலும்
பூண்ட கலையழகைப் போய்வணங்கி நாம்வருவோம்.

இலக்கியவளம்

செந்தேன் இலக்கியங்கள் தெற்கின் கருவூலம்
முந்திப் பிறந்ததிரு முப்பால் அதன்தாயாம்.
எட்டுத் தொகையில் இருப்பதே ஐந்தகமாம்
விட்டவொரு மூன்றே விரிக்கும் புறப்பொருளாம்.
கட்டிக் கரும்பாகக் காதல் இனித்ததனுல்
மட்டும் அகத்துறையை வாரிவிட்டார் என்பதில்லை
வாழ்வின் உயிரே வளர்காதல் என்பதனுல்
சூழும் உயிர்க்குயிரே தூயகா தல்லதனுல்
மூழ்கிக் குளித்தெழுந்து முற்றும் அகப்பொருளை
தாழ்வின்றி நூலில் தனிக்கள்ளாய்த் தாம்வடித்தார்.

வாகைசூடும் காலம்

விண்முட்டும் தென்னை, விரிந்தபலா முக்கனிகள்
மண்ணிற் கனிப்பொருள்கள் மற்ற வளம்பலவும்
உண்ணக் கிடைத்தென்ன ! ஒய்யாரப் பாட்டென்ன !
கண்ணைப் பறித்துப்பின் கையை முறித்துவிட்டார்
எண்ணஞ் சிதைய எட்டி யுதைக்கின்ருர்
மண்ணில் மறக்குலத்தின் மாண்பை மறைத்துவிட்டார்.
கண்ணீர் வடித்துக் கலங்கிப் பயனில்லை
மண்ணில் உரிமைப்போர் மாருமல் நேர்ந்தால்தான்
அண்ணுவின் கீழே அடைவோம்நம் தென்னகத்தை
திண்ணமாய் எண்ணியிதைத் திட்டமிட்டுத் தானேநாம்
செங்குட் டுவனுகத் தேர்ந்து வடதிசைக்கு
தங்கம்,சம் பத்தை,தர் மத்தோ டனுப்பியுளோம்
எண்ணக் கனவிதுவோ ! இல்லை உறுதியிது,
மண்ணில்என் தெற்கு மறையாது ஓர்காலும்
தெற்கில் உதித்துவிட்டான் செங்கதிரோன், சூடேற்றி
நிற்கா தினிப்படைகள் நீண்டநாள், போர்தொடுப்போம்
என்ன தமிழண்ணல் ! எண்ணம் சரிதானே !
நன்றி ! முடித்து விட்டேன் நான்.

தியாகச் சுடர்

மணிவேந்தன் பி. ஏ.

ஆபத்திற்கு

முள்ளூர் மலைக்காடு. அந்தக் காட்டினூடே வளைந்து செல்லும் பாதை! பாதையின் இருமருங்கிலும் ஓங்கி வளர்ந்த மரங்கள்! மரங்களிலே தழுவிச் செல்லும் பூங்கொடிகள்! கொடிகளிலே பூத்துக்குலுங்கும் வண்ணமலர்கள்! மலர்களிலே மதுவுண்ண, வட்டமிடும் வண்டினத்தின் ரீங்காரம்! ரீங்காரத்திற்குத் தகுந்தாற்போல் பாடும் குயிலினங்கள்! அதற்குத் தக்க ஆடும் மயிலினங்கள்! இயற்கையின் திருக்கூத்தே அங்கேதான்...!

அந்தக் காட்டுப்பாதை வழியாக ஓடிக்கொண்டிருந்தது, ஒரு குதிரை. காடே அதிரும்படியாக 'டக், டக்' கென்றே பயங்கர ஒலியோடு ஓடியது. அதன் மேலே இருப்பவனோ அச்சத்தால் வெருண்டு ஓடுபவன் போலக் காணப்பட்டான். அவனுடைய இரு கண்களும் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே இருந்தன.

அவனைத் துரத்திக்கொண்டு வரும் பகைவர்களும் எப்படியும் அவனைப் பிடித்து ஒழித்துவிட வேண்டும் என்ற எண்ணத்திலே தான் விடாப்பிடியாகத் துரத்திக்கொண்டே வநதனர். ஈட்டி, வாள் முதலிய பயங்கர ஆயுதங்கள், அவர்கள் கைகளிலே மின்னிக்கொண்டிருந்தன.

முன்னே விரைந்து சென்றுகொண்டிருந்த அவனோ, வேறொரு குறுகிய பாதைக்குத் தன் குதிரையைத் திருப்பி முடுக்கினான். இப்பொழுது யாரையோ எதிர்பார்ப்பவன்போல் சுற்றுமுற்றும் பார்த்துக்கொண்டே சென்றாலும் வேகத்தை மட்டும் குறைக்கவே இல்லை. அதோ... அந்தப் பலாமரத்தடியிலே அவன் எதிர்பார்த்தபடியே 'அவள்' நின்றுகொண்டிருந்தாள். குதிரையின் குளம்பொலி கேட்ட குதூகலத்தில் நின்றுகொண்டிருந்த அந்தக் குமரியின் அருகிலே குதிரையைச் செலுத்தினான்.

"அத்தான்! ஏன் இன்று பரபரப்பாக இருக்கிறீர்கள்?" என்று கேட்டுக்கொண்டே அவன் அருகில் ஓடிவந்தாள்.

"அதையெல்லாம் அப்புறம் சொல்லுகிறேன். நான் மன்னனாவதை விரும்பாத சிலர் என்னைக் கொல்ல வருகின்றனர். உன் தந்தையின் உதவிதான் தேவை. அதோ... பின்னால் அவர்கள் வரும் சத்தம் கேட்கிறது! இனி ஒருகணம்கூட இங்கே இருந்தால் ஆபத்து" என்று கூறிக்கொண்டே அவளைத் தன் குதிரையின்மீது தூக்கிவைத்தான். கடிவாளத்தை, சுண்டிவிட்டான். புழுதியைக் கிளப்பிக்கொண்டு புறப்பட்டது அவன் குதிரை.

அடைக்கலம்...

தமிழ்நாட்டின் தலைசிறந்த சோழ வேந்தர்களில்சிறந்தவன் கரிகாலன். அவனது மைந்தர்களில் ஒருவனான நலங்கிள்ளியால் ஆவூரிலும் உறையூரிலும் தாக்கப்பட்டு, கடைசியில் 'காரியாறு' என்னுமிடத்தில் கொல்லப்பட்ட நெடுங்கிள்ளியின் அருமைப் புதல்வன்தான் 'பெருங்கிள்ளி' என்பவன். தந்தை கொல்லப்பட்டவுடன் பெருங்கிள்ளி அரியணை ஏறினான். ஆனால், சுற்றத்து அரசர் சிலர் ஒன்று சேர்ந்துகொண்டு அவனுக்கு எதிராகக் கலகஞ் செய்தனர். கலகத்தால் பெருங்கிள்ளியை அரியணையிலிருந்து அகற்றமுடியாது போரிலும் வெல்லமுடியாது என்று தெரிந்த பிறகு அவனைக் கொன்றுவிடத் தீர்மானித்தனர். ரகசியமாக அவனைக் கொல்ல ஏற்பாடுங்கூட நடத்தினர்.

பெருங்கிள்ளியோ தினசரி மாலை வேளையிலே தன் காதலியைக் காணச் செல்வான். முள்ளூர் மலைக்காட்டின் எழிலூடே விளங்கும் அந்தப் பலாமரத்தடியில் தான் தினந்தோறும் அவர்கள் சந்திப்பது வழக்கம். அன்றும் மாலைப்பொழுது வந்தவுடன் தன் குதிரையிலே அவளைக் காணப் புறப்பட்டான். இதையறிந்த அவன் எதிரிகள், அவனைக் கொல்ல இதுவே தக்க சமயமெனக் கருதி, பெருங்கிள்ளியைத் துரத்திச் சென்றனர் சுற்றியிருக்கும் சூழ்நிலையையும், எதிரிகளின் திட்டத்தையும், அவர்கள் துரத்தி வருவதையும் கண்ட பெருங்கிள்ளி, தன் குதிரையைப் பன்மடங்கு வேகமாகச் செலுத்திக் கொண்டிருந்தான். பின்...!

தன் காதலியோடு அவன் நாட்டை நோக்கி, ஓர் அடைக்கலப் பொருளாகப் போய்க்கொண்டிருந்தான் அவன்!

அளித்தவன்...

திருக்கோவலூரைத் தலைநகராகக் கொண்டு அரசாட்சி செலுத்திய மலையமான் திருமுடிக்காரியின் மகன் தான் திருக்கண்ணன். இளமைப் பருவத்திலே சோழப் படைக்குத் தளபதியாக இருந்து, பல போர்களிலே வெற்றி பெற்றமையால் 'சோழிய ஏனாதி' என்ற விருதுப் பெயர் பெற்றவன். மலையமான் இறந்தவுடன் அரசாட்சிப் பொறுப்பை ஏற்றுச் செம்மையான முறையில் செலுத்தி வந்தான். தந்தையைப் போலவே தயாளகுணத்திலும் வீரத்திலும் தனக்கு நிகர் தானே என்பதற்கு எடுத்துக் காட்டாக இலங்கினான். அவனுடைய அன்புச்செல்வி தான் மாங்குயில். பெருங்கிள்ளியின் உள்ளங்கவர்ந்த காதலி.

ஆகவேதான், நாட்டிலே பகைவர்கள் எதிர்க்கவும், சோழ நாட்டிற்குத் தளபதியாக இருந்ததால் அந்நாட்டின் மீது அளவில்லாப் பற்றுக்கொண்டவனும், தன் காதலியின் தந்தையுமான திருக்கண்ணனின் உதவியை நாடிச் சென்றான் பெருங்கிள்ளி, குறுநில மன்னனே யானாலும் குன்றாத வீரமும் குலையாத படைபலமும் கொண்டவன் திருக்கண்ணன் என்பது பெருங்கிள்ளி அறிந்ததே. அத்தகையவனின் உதவியைப் பெற்றால் எளிதிலே தன்நாட்டை மீட்டுத் தான் மன்னனாகலாம் என்று எண்ணினான். மாங்குயிலும் அவனுக்கு வேண்டிய உதவி செய்வாள் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

திருக்கோவலூரை அடைந்தவுடன் மாங்குயிலை வேறுவழியாக அரண்மனைக்கு அனுப்பிவிட்டு, தான் மட்டும் மன்னனை—மாங்குயிலின் தந்தையைக்-காணச்சென்றான். பெருங்கிள்ளியைக் கண்ட திருக்கண்ணன் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையே இல்லை, அன்போடு அவனை வரவேற்றான் திருக்கண்ணன்.

"இளவரசே! திடீரென்று இங்கே வரக் காரணம் என்ன?"

"நாட்டிலே ஒரே குழப்பம்..."

"குழப்பமா? ஏன்?"

"நான் மன்னனாவதைச் சுற்றத்து அரசர்கள் வெறுக்கின்றனர். அதன் காரணமாக......"

"புரட்சியைத் தூண்டி விடுகிறார்கள்! அப்படித்தானே! நாட்டிலே குழப்பமென்றால் அதை அடக்கும் ஆற்றல் எந்த மன்னனுக்கும் இருக்க வேண்டும்"

"குழப்பம் மட்டுமல்ல...என்னைக் கொன்றுவிட ரகசியமாக ஏற்பாடுகள் செய்கின்றனர். அதனால்தான் உங்களிடம் அடைக்கலமாக வந்திருக்கிறேன்"

"சோழ ஏந்தலே! சோழர்குடியிலே பிறந்த உங்களுக்கு என் உதவி எந்த நேரமும் உண்டு. குழப்பம் ஏற்பட்டவுடனே எனக்குச் சொல்லி அனுப்பியிருந்தால் நானே வந்திருப்பேனே."

"..............."

"மிகவும் கலக்கமடைந்திருக்கிறீர்கள்! இளவரசே! இன்று ஓர் ஒற்றனை உங்கள் நாட்டிற்கு அனுப்பி அங்குள்ள நிலைமையை அறிந்துவர ஏற்பாடு செய்கிறேன். அதற்குப் பிறகு போர் தொடுக்கலாம்."

"அதுவரை......?"

"நீங்கள் இங்கேயே தங்கியிருங்கள்."

மகள்...

திருக்கண்ணனின் படைகள் சோழநாட்டை நோக்கிப் புறப்படத் தயாராயின இன்னும் கொஞ்சநேரத்திலே புறப்பட்டுவிடும். பெருங்கிள்ளியோ மாங்குயிலிடம் விடை பெற்று வரத் தோட்டத்திற்குச் சென்றான்.

"மாங்குயில்" என்று அழைத்தான்.

இயற்கையரசித்துக்கொண்டிருந்த அந்தக் கட்டழகி, குரல் வந்த திசைக்குத் திரும்பினாள்.

"அத்தான்" - அவன் அருகிலே ஓடினாள்.

"படைகள் புறப்பட்டுவிட்டன. நான் சீக்கிரம் போகவேண்டும்..."

"கொஞ்சநேரங்கூட..."

"தாமதிக்கவே கூடாது...விடை கொடு."

"அத்தான்! நேற்று உறையூரிலிருந்து ஓர் ஒற்றன் வந்து, என் தந்தையிடம் கூறியதைக் கேட்டால் சிந்தை நோகிறது"

"விந்தையாக இருக்கிறதே ஏன்?"

"போர்க்களத்திலே வெற்றி கிடைக்காவிட்டாலும்கூட, உங்களை மறைந்திருந்தாவது கொன்றுவிட ஏற்பாடு நடக்கிறதாம். அதை நினைத்தால்..."

"நெஞ்சு வெடித்துவிடுமோ?"

"இல்லையத்தான்! உங்கள் உயிருக்கு ஆபத்து வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்!!

"குயில்! பகைவர்களை வென்று நாட்டைக் கைப்பற்ற போர்க்களம் நோக்கிச் செல்லும் உன் அத்தானை, வீரனாக்க வேண்டிய நீ கோழையாக ஆக்கிவிடுவாய்போல் இருக்கிறதே!"

"அப்படி மாற்ற நான் ஒரு கோழையின் புதல்வியல்லவே. அத்தான்! எதிர்த்துவரும், வீணர்களை வெஞ்சமரிலே வென்று, வெற்றி வீரராகத் திரும்பி வாருங்கள்."

"வருகிறேன்! குயில் — வருகிறேன்!"

அவன் சென்றான்! அவள் கண் கலங்கி நின்றாள்!.

மடிய...

போர் மும்முரமாக நடந்து கொண்டிருந்தது. பெருங்கிள்ளி முழு வீரத்தோடும் போரிட்டுக் கொண்டிருந்தான். இவர்களின் படைகளோ பகைவர்களை முறியடித்த வண்ணம் முன்னேறிக் கொண்டே எதிரிகளின் கோட்டை வாயிலை அடைந்து விட்டன. இன்னம் சிறிது நேரந்தான் போர்! வெற்றி நிச்சயம்! பெருங்கிள்ளி வாகை சூடுவான்!!

ஆனால், அந்த துயரத்துடன் வெற்றியும வரும் என்று யாருக்குத் தெரியும்? அந்த நேரத்தில் ஒரு கூர்மையான ஈட்டி பெருங்கிள்ளியை நோக்கிப் பாய்ந்து வந்து கொண்டிருந்தது. சண்டை செய்து கொண்டிருந்த பெருங்கிள்ளியோ, பின்னால் இருந்து வரும் பேடிகளின் ஈட்டியைக் கவனிக்கவேயில்லை. ஆ! இன்னும் ஒரு நொடி தாமதித்தால் அது அவன் உடலிலே பாய்ந்து, உயிரை வாங்கி விடும். அதற்குள்...பறந்து வரும் அந்த ஈட்டியைப் பார்த்து ஒருவீரன் பாய்ந்து வந்தான் தன் குதிரையில். பெருங்கிள்ளியின் உடலிலே பாய்வதற்குள் அவன் குறுக்கே பாய்ந்தான்.

அடுத்த கணம்! அந்தோ பரிதாபம்; அந்த ஈட்டியைத் தடுக்கச் சென்ற அந்த வீரனின் மார்பிலே அது ஆழமாகப் பாய்ந்து விட்டது! உடலெல்லாம் ரத்தம் வழிந்தோட, 'ஆ' என்று அலறியவாறே கீழே விழுந்தான் அந்த வீரன். சண்டை செய்து கொண்டிருந்த பெருங்கிள்ளி ஒருவாறு இதையெல்லாம் அறிந்து கொண்டான்.

"வெற்றி! வெற்றி!" என்ற குரல் விண்முட்ட ஒலித்தது. வெற்றி பெற்ற பெருமிதத்திலே தன் உயிரைக் காத்த அவ்வீரனைக் காணச் சென்றான் பெருங்கிள்ளி. ஆனால்... அங்கே அவன் கண்ட காட்சி...அவனுடைய அன்புக்காதலிமாங்குயிலைத் தான் போர்வீரன் உடையிலே, மார்பிலே ஈட்டி பாய்ந்து ரத்தம் பெருக்கெடுத்தோடும் நிலையிலேகண்டான்.

"ஐயோ மாங்குயில்; உனக்கா இந்தக் கதி?" என்று கதறினான்.

"அத்...தான்..."-பேசமுடியாமல் பேசினாள் மாங்குயில்.

"குயில்! உன்னை இந்த நிலையிலா காணவேண்டும்? வெற்றி பெற்றதனால் மகிழ்ச்சியோடு இருக்கும் உன் தந்தை உன்னிலை அறிந்தால் என்ன பாடுபடுவார்? ஐயோ! அவருக்கு நான் என்ன சொல்லி ஆறுதல் அளிப்பேன்? நீ எதற்காக இங்கே வரவேண்டும்...?"

"அத்தான்! உங்கள் உயிருக்கு ஆபத்து என்று அறிந்த பிறகும் அரண்மனையிலே அடைந்துகிடக்கும் ஒரு கோழையின் புதல்வியாகவா பிறந்தேன்? ஒரு வீரருக்கு மகளாகப் பிறந்து, ஒரு வீரரையே காதலித்த நான் வீர மரணம் அடைவதிலே மகிழ்ச்சி அடைகிறேன். அத்தான்... உஙகளுக்கு வெற்றி கிடைத்து விட்டது! நான் நினைத்தபடியே உங்கள் உயிரையும் காப்பாற்றி விட்டேன். என்னுடைய உயிரை என் அன்பு அத்தானுக்காக அர்ப்பணம் செய்வதிலே களிப்படைகிறேன். அத்...தான்...அப்...பா..."

அவள் உயிர் பிரிந்தது.

"ஐயோ! குயில்! என்னுடைய உயிருக்காக உன்னுடைய உயிரையே தியாகம் செய்த உத்தமியே! தியாகச்சுடர் விளக்கே! தீந்தமிழ் ஒளி விளக்கே! தங்கமே!" என்று கண்ணீரை அவளுடலிலே கொட்டினான்.

ஆபத்திற்கு-அடைக்கலம்-அளித்தவனின் - மகள் - மடிய, சோழநாட்டிற்கு மன்னனான பெருங்கிள்ளியைப் பற்றியும், அவன் வீரத்தைப் பற்றியும் பாடிய புலவர்கள், ஏனோ அவனது உயிரைக் காப்பாற்றிய மாங்குயிலைப் பற்றியும் அவளது உயரிய தியாகத்தைப்பற்றியும் பாட மறந்துவிட்டனர். மறந்தாலும் வீரத் தமிழ்மங்கை மாங்குயிலின் தியாகச்சுடர் ஒளி விட்டுக்கொண்டுதான் இருக்கும். அதை அணைக்க யாராலும் முடியாது.

★

அருப்பை கிழார்
கில்லாடி முத்தன் M.L.A.

உடும்புக்குடி என்றால் தமிழகத்தில் அறியாதவர்கள் இருக்க முடியாது.

1947-க்குப் பிறகு நடந்த ஒவ்வொரு தேர்தல்களிலும் கடுமையான போட்டிகளுக்கிடையே காங்கிரசு வேட்கையாளராக நின்று வாகை சூடிய திருவாளர். கி. முத்துசாமி எம். எல். ஏ. அவர்கள் அவதரித்த திருத்தலம் உடும்புக்குடி!

பொதுத் தேர்தல் தவறாமல் திரு. கி. மு. அவர்கள் போட்டியிட்டு வெல்வதும் அந்த உடும்புக்குடி சட்டமன்றத் தொகுதியில்தான்!

1958-ல் நடந்த பொதுத் தேர்தலில் உடும்புக்குடி முடிவை உலகமே இமை கொட்டாமல் கவனித்துக் கொண்டிருந்தது. காரணம்; இது தான்:—

வழக்கம்போல் திரு. கி மு. அவர்கள் காங்கிரசு வேட்கையாளராக நிறுத்தப்பட்டிருந்தார்கள். கம்யூனிஸ்டுகள், சோசலிஸ்டுகள், எவரும் கி. முவை எதிர்த்துப் போட்டியிடத் துணியவில்லை. தனிப்பட்டவர்களும் பலமுறை அவரை எதிர்த்து மண் கவ்வி இருந்த காரணத்தால் போட்டியிடத் துணியவில்லை.

இந்தத் தடவை திரு. கி. மு. போட்டியின்றி வந்துவிடுவார் என்று நாடெல்லாம் நினைத்துக்கொண்டிருந்த கடைசி நேரத்தில். புதிதாகத் தேர்தலில் குதித்த தி, மு. க சார்பில் தமிழ்த்தாசன் என்பவர் வேட்கை விண்ணப்பம் தாக்கல் செய்தார்.

போட்டி கடுமையாகிவிட்டது. அறிஞர், நாவலர், கவிஞர், கலைஞர். சொல்லேருழவர், எல்லாரும் வந்தார்கள். தி. மு. க வின் சீரிய கொள்கைகளை முழக்கினார்கள். உடும்புக்குடித் தொகுதி 20 நாட்கள் அல்லோல கல்லோலப்பட்டது. இந்தத் தடவை கி.மு. வுக்கு நாமம்தான்என்று தொகுதி முற்றிலும் பேசிக்கொண்டார்கள். வாக்குப் பதிவுக்கு 2 நாட்கள்தான் இருந்தன. அதுவரை காங்கிரசுக் கூட்டத்திற்கு உருப்படியான தலைவர் ஒருவரும் வரவில்லை. கடைசி நேரத்தில் காங்கிரசுத் தலைவர் மன்மதவேந்தன் என்பவர் வந்தார்.

அன்று காங்கிரசுப் பொதுக் கூட்டம் இரவு 7 மணிக்கு நடைபெறும் என்று, அறிவிக்கப்பட்டிருந்தது. இரவு 11 மணிக்குத்தான் மன்மதவேந்தன் வந்தார். மணிக் குறளாக நான்கைந்து வார்த்தைகள் பேசிவிட்டு, நேரே கி. மு. வீட்டுக்குப் போனார். விடியற்காலம்வரை தொகுதி முற்றிலும் கார் ஒன்று பறந்து பறந்து சென்று, யார் யாரையோ சுமந்து கொண்டு வந்தது. விடிந்த பிறகு யாதொரு நிகழ்ச்சியும் இல்லை.

ஆனால், அன்று முதல் காங்கிரசுக்குத்தான் வெற்றி என்று சிலர் சொல்லிக்கொண்டு திரிய ஆரம்பித்தனர். அதுவரை பணப்பேச்சே பேசாத வாக்காளமக்கள், மன்மதவேந்தன் வருகைக்குப் பிறகு பணம் கேட்க ஆரம்பித்தனர்.

வாக்குப் பதிவு முடிந்து எண்ணும் போது 250 வாக்குகள் அதிகம் பெற்று திருவாளர் கி. முத்துசாமி வாகை சூடினார் என்று தெரிய வந்தது.

அன்றுஆரம்பித்த வெற்றிஊர்வலம், பாராட்டுக் கூட்டம் 10 நாள் வரை தொடர்ந்து நடைபெற்றது. அந்தப் போட்டியில்தான் உடும்புக்குடி மறக்க முடியாத பிரபலமடைந்தது.

அதிலிருந்து உடும்புக்குடி என்றால் கி. மு. தொகுதி என்றும், கி. மு. என்றால் உடும்புக்குடியார் என்றும் அரசியல் வட்டாரங்களில் பேசப்பட்டு வருகிறது.

இவ்வளவு செல்வாக்குக்குரிய ஒரு மனிதரின் வரலாற்றை—தொகுதியை -தெளிவாக தெரிந்து வைத்திருப்பது அவசியமல்லவா?

உடும்புக்குடி என்பது காரணப் பெயரல்ல. கழுகுகள் இருப்பதால் கழுக்குன்றம், நெற்பயிர் சூழ்ந்திருப்பதால் நெல்வேலி என்பன போல், உடும்புகள் நிறைந்திருப்பதால் உடும்புக்குடியாகி இருக்குமோ என்கிற ஐயம் எவருக்கும் இருக்க வேண்டியதில்லை.

உடும்புக்குடி. மதுரை மாவட்டத்தில் இரயில்பாதைக்கு 10 கல் தூரத்திலுள்ள பெரிய ஊர். 15 உறுப்பினர்களுடைய ஊராட்சி மன்றம் ஒன்றும் அங்கே இருக்கிறது. நமது கி. மு. சிறுவயதாயிருக்கும் போதிலிருந்தே அந்த ஊர் இதே அளவில்தான் இருந்து வருகிறது. விரியவும்இல்லை. குறையவும் இல்லை.

அந்த ஊரில் உதிரமாடக் கொத்தனார் என்று ஒருவர் இருந்தார். அவருடைய செல்வமகனாகப் பிறந்தவர்தான் திரு. கி. முத்துசாமி.

உதிரமாடக் கொத்தனார் மகன் முத்துசாமி என்றால் உ. முத்துசாமி என்றல்லவா சொல்ல வேண்டும்? கி. முத்துசாமி என்று சொல்வானேன்? இப்படிக் கேட்கலாம்! அது ஒரு பெரிய கதை. போகப் போக விளங்கும்.

நமது, கி. மு 12 வயதுச் சிறுவனாக இருந்தபோதே, தாய் தந்தையர் இருவரும் ஒருவர்பின் ஒருவராகக் காலமானார்கள். ஊராருக் கெல்லாம் வசதியான வீடுகள் கட்டிக் கொடுத்த உதிரமாடக் கொத்தனார், தமது அருமை மகனுக்கு வைத்திருந்த ஒரே செல்வம் ஓடு வேய்ந்த ஒரே ஒரு சிறிய வீடு தான்.

தகப்பனார் காலமாகும்போது முத்துசாமி 2-ம் வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் பள்ளிக்கு வந்து ஐந்துஆண்டுகள் பூர்த்தியாகி விட்டன.

"தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்" என்கிற முதுமொழி, நமது முத்துசாமி வாழ்வைப் பொறுத்தமட்டில் முற்றிலும் உண்மையாக இருந்தது.

2-ம் வகுப்பிற்கு உயர்த்தப்பட்ட முத்துசாமி 3 ஆண்டுகளாக அதே வகுப்பில் நன்றிமறவாமல் நிலைத்திருப்பதைக் கண்ட பள்ளியாசிரியர், அவன் பள்ளிக்கு வராமல் இருப்பதே நல்லதென்று முடிவு செய்தார்.

முத்து சாமி, முடனாகவும் சிறுவனாகவும் இருந்த போதிலும். அவனிடம் சில சாதுரியமும் தந்திரமும் இருந்தன.

காலையில் 8 மணிக்குத்தான் தூங்கி எழுந்திருப்பான். உடனே ஊருக்கு மேற்கே நெடுஞ்சாலையில் இருக்கும் அழுகணியாபிள்ளை ஓட்டலுக்குப் போவான். அப்போதுதான் இட்லிப் பானை சாம்பார்ப்பானை மற்றும் சில பாத்திரங்கள் கொல்லைப் புறத்தைச் சேர்ந்திருக்கும் அவைகளைகழுவிஅடுக்கி வைத்தவுடனே இரண்டு இட்லியை அரைச்சட்டி சாம்பாரில் மிதக்கவிட்டுக் கொண்டு வந்து கொடுப்பார் அழுகணியாபிள்ளை. அந்த இட்லியை கம்பங் கூழ்போல் சாம்பாரில் குழப்பித் தின்று முடிப்பான் முத்துசாமி.

அடுத்தபடியாக ஒரு கிண்ணம் காபி கொடுப்பார் அழுகணியாபிள்ளை. அதையும் குடிப்பான். அத்துடன் ஓட்டல் அலுவல் முடியும்.

உடனே நேராக ஊருக்கு வட திசையை நோக்கிப் புறப்படுவான்.

அங்கேதான் நல்லதம்பிச் செட்டியாரின் செக்குப்பேட்டை இருக்கிறது. நல்லதம்பி செட்டியாருக்கு எந்நேரமும் 20 செக்குகள் ஓடிக்கொண்டிருக்கும். அத்தனையிலும் நல்லெண்ணெய் ஆட்டுவது வழக்கம். அந்த செக்குகளில் கூலிக்கு எண்ணெய் ஆட்டிக் கொடுக்கும் தொழிலாளர்கள் 40 பேருக்குக் குறையாமல் வேலை செய்வார்கள். "பகவானே என்னை அழைத்துக் கொள்ளமாட்டாயா?" என்ற கோரிக்கையுடன் கோவிலை வலம் வரும் முதியோர்களைப்போல எலும்பும் தோலுமான மாடுகள் 40-க்குக் குறையாமல் செக்குகளை வலம் வந்துகொண்டிருக்கும்.

அங்கே வேலை செய்யும் மாடுகளும் சரி; மனிதர்களும்சரி; எல்லாரும் முத்துசாமிக்கு அறிமுகம் ஆனவர்கள்தான்.

ஓட்டல் அலுவல்களை முடித்துவிட்டு வந்த முத்துசாமி எல்லாருக்கும் ஒத்தாசை செய்வான்.

மாடுகளை நிறுத்தித் தீனி போடுவான். செக்கில் வேலை செய்பவர்களுக்கு வெற்றிலை சிகரட்டு பீடி வாங்கி வருவான். அவர்களுடன் சேர்ந்து வெற்றிலை போட்டுக் கொண்டு பீடி புகைப்பான். யாருக்காவது ஒன்றுக்கு இரண்டுக்கு போக நேரிட்டால் இவனைக் கூப்பிட்டு [செக்கிலேறி மாடுகளை ஓட்டும்படி சொல்லி விட்டுப் போவார்கள். நடுப்பகல் 2 மணிவரை இப்படியே செக்குகளுக்கு இடையில் திரிவான்.

பகல் 2 மணிக்கு செக்குகளை நிறுத்தி விட்டு எல்லாரும் சாப்பிடப் போவார்கள். அப்போது முத்துசாமியின் உழைப்புக்குக் கைம்மாறாக ஆளுக்கு கொஞ்சம் புண்ணாக்குத் தருவார்கள். அந்தப் புண்ணாக்கு நண்பகலுணவுக்குப் போதுமானதாக இருக்கும்.

புண்ணாக்கு வாங்கி முடிந்ததும் முத்துசாமி வேறோர் இடத்திற்குக் கிளம்பிவிடுவான். அந்த இடம் ஊருக்குத் தெற்கில் இருக்கும் சிவன் கோவில்.

அந்தக் கோவிலில் ஆயிரக்கால் மண்டபம் இல்லாத காரணத்தால் ஆண்டவன் அவதிப்படுவதாகக் கருதிய மதிநந்தான் செட்டியார் என்பவர் இலட்சக்கணக்கான ருபாய்களைச் செலவிட்டுத் திருப்பணி புரிந்துகொண்டிருந்தார். அந்த ஆயிரக்கால் மண்டபத்தில் அடித்தளம் போடும்போது நமது முத்துசாமியின் தகப்பனார் உதிரமாடக் கொத்தனாரும் சில நாள் வேலை செய்தார். அந்தப் புண்ணிய வசத்தினால் தானோ என்னவோ, உதிரமாடக் கொத்தனார் இறைவன் திருவடிக்கு விரைவிலேயே போய்ச் சேர்ந்து விட்டார்.

ஆயிரக்கால் மண்டபத்திற்கு சிற்பங்கள் செதுக்குவதற்காக 20 கல் தச்சர்கள் அமர்த்தப்பட்டிருந்தார்கள். உதிரமாடக் கொத்தனாருக்கும் அந்தக் கல்தச்சர்களுக்கும் நல்ல அறிமுகம் உண்டு. உதிரமாடக் கொத்தனார் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது அவருடன் முத்துசாமியும் வந்து போய்க் கொண்டிருப்பான். அதனால் கல்தச்சர்கள் அனைவருக்கும் முத்துசாமியும் அறிமுகமாகி இருந்தான்.

தகப்பனார் காலமான பிறகு முத்துசாமி தினந்தோறும் ஆலயத்திருப்பணி நடக்குமிடத்துக்கு வருவான். அங்கேயும் செக்குத் தொழிலாளருக்கு உதவியது போல, வெற்றிலை பீடி முதலியன வாங்கிவந்து கொடுத்துக் கொண்டிருப்பான். மாலை 6 மணிக்கு கல்தச்சர்களின் வேலைமுடியும். அப்போதுமுத்துசாமிக்கு அரையணா ஓரணா கொடுப்பார்கள் இதைக்கொண்டு சாயங்காலச் சிற்றுண்டி முடிவுறும். இதற்குள் இரவு 10 மணி ஆகிவிடும், உடனே பழைய அழுகணியாபிள்ளை ஓட்டலுக்குப் போய்விடுவான். அங்கே பயன்படுத்தப் பட்ட பாத்திரங்கள் அத்தனையும் கழுவுவதற்காக இவனை எதிர்பார்த்துக் கொண்டிருக்கும். அவைகளை கழுவி அடுக்கியதும் அழுகிணியா பிள்ளை ஒருவேளைச் சோறு போடுவார். அது சில சமயங்களில் ஊசிப் போனதாகவும் கல் மண் கலந்ததாகவும் இருப்பதுண்டு. அதைப்பற்றி எல்லாம் முத்துசாமி கவனிக்கமாட்டான். ஏதோ வயிறு நிறைந்தால் சரி! சாப்பிட்டு முடிந்ததும் எங்காவது வெளித்திண்ணைகளில் படுத்துத் தூங்குவான். மறுநாள் காலை 8 மணி முதல், முதல் நாட்போலவே எல்லா இடங்களுக்கும் போய் கடமையை முடித்துத் திரும்புவான்.

ஊரில் எங்காவது திருமணமோ, இழவோ ஏற்படாத நாளிலெல்லாம், முத்துசாமியின் நித்திய கடமைகள் மேலே கண்டவிதமாக இருக்கும்.

திருமணம் இழவு எங்காவது ஏற்பட்டால் முத்துசாமிக்கு யாருடைய அழைப்பும் தேவையில்லை. முதல் ஆளாகப் போயிருப்பான். அங்குள்ள அலுவல்களில் பங்கு கொள்வான். இரண்டொரு நாட்களை அங்கேயே போக்கி விடுவான். அதுமுடிந்ததும் பழைய கடமைகளைச் செய்யப் போய் விடுவான்.

இப்படியே 12 ஆண்டுகளை கடத்தினான். ஆயிரக்கால் மண்டபவேலை முடிந்து கல்தச்சர்களும் அவரவர் ஊருக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

அதனால் முத்துசாமிக்கு பகல் 2 மணிக்கு மேல் இரவுவரை பொழுது போக்கவும், மாலைச் சிற்றுண்டிக்கும், வகையில்லாமல் போய் விட்டது.

இந்த நிலைமை ஏற்பட்ட பிறகு முத்துசாமிக்கு, பகல் 12மணியிலிருந்து இரவு 8 மணிவரை பொழுதுபோவது சிரமமாக இருந்தது. 24 வயது வாலிபனான அவனுக்கு நடுப்பகலில் கொஞ்சம் புண்ணாக்கைத் தின்றுவிட்டு இரவு வரை ஒன்றுமில்லாமல் இருப்பதால் நிம்மதியின்றி பைத்தியம் பிடித்தவன் போல் இருப்பான்.

இப்படிச் சிலநாட்கள் சென்றன. ஒருநாள் காலை அலுவல்களான ஓட்டல் வேலை, செக்குப் பேட்டைத் தொண்டு எல்லாம் முடித்துவிட்டு, எதிலும் மனம் செல்லாதவனாய் வீட்டிலாவது சிறிது நேரம் இருந்து பொழுது போக்கலாம் என்ற எண்ணத்துடன் வீட்டுக்கு வந்தான்.

இதுபோல் அவன் தன்னுடைய சொந்தவீட்டுக்குச் செல்வது என்றைக்

காவது ஒருநாளாகத்தான் இருக்கும். அந்த வீட்டில் யாரும் குடியில்லாத தால் வாசல் பெருக்கித் தெளித்துத் துப்புரவு செய்யாமல் பாழடைந்த-குடிபோன வீடாகவே இருக்கும்.

முத்துசாமி வந்தாலும் வாசலைப் பெருக்கித் தெளித்து வைக்க மாட்டான். வீட்டைமாத்திரம் உட்புறத்தில் சிறிது பெருக்குவான். செக்குப் பேட்டையில் மாடுகட்டும் இடம், தொழிலாளர்கள் சாப்பிடும் இடம் ஆகியவற்றை அவன் பெருக்கி வைத்திருக்கும் நேர்த்தியைக் கண்டவர்கள். அவனுடைய வீட்டை வந்துபார்த்தால் அது முத்துசாமியின் வீடு என்று ஒப்புக்கொள்ளமாட்டார்கள். அந்த அளவுக்கு அருவருக்கும்படி வீட்டை வைத்திருப்பான்.

வழக்கம்போல அன்றைய தினமும் வீட்டில் நுழைந்ததும் மேல் துண்டினுல் தரையை தட்டி தூசி குப்பைகளை ஒதுக்கிவிட்டு அதையே விரித்துப் படுத்துக்கொண்டான்.

அதே நேரத்தில். இரை இரைக்க ஓடி வந்த ஒருவன் திடீரென்று முத்துசாமியின் வீட்டில் நுழைந்து தடாரென்று கதவை மூடிப் பூட்டினுன்.

முத்துசாமி அந்த சத்தத்தைக் கேட்டுப் பதறி எழுந்து வந்தவன் கிட்டப் போய்;

"யாரடா நீ? இங்கே எதற்கு வந்து கதவைப் பூட்டிக்கொண்டிருக்கிருய்?" என்றுன். வந்தவனுக்கு ஏறக்குறைய முத்துசாமி வயதுதான் இருக்கும். அச்சத்தால் நடுங்கிக்கொண்டே முத்துசாமியின் வாயைப் பொத்திஞன். கைகூப்பி வணங்கினுன்வந்தவன்.

'ஐயா போலீசார் துரத்திக்கொண்டு வருகிருர்கள். காட்டிக் கொடுக்காமல் தயை செய்யுங்கள். விவரங்களை பிறகு சொல்கிறேன்" என்றுன் காதோடு.

முத்துசாமிக்கு பரிதாபமாக இருந்தது. "இவன் யாராக இருக்கலாம்? போலீசார் ஏன் துரத்துகிருர்கள். இங்கே வந்து நுழைந்துகொண்டு கும்பிட்டுக் கூத்தாடுகிருனே. இவனுல் நமக்கு ஏதாவது தொல்லை வந்தால்...?" என்று தனக்குள் எண்ணமிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய சிந்தனையை வாசலிலிருந்து வந்த "டக். டக்" என்னும் செருப்புச் சத்தம் கலைத்தது. நான்கைந்து போலீசார் மொத்தமாக அவன் வாசலுக்கு வந்த சத்தமே அது.

அடுத்த விநாடியில் "தட், தட்" என்று கதவில் தடியால் தட்டுகிற சத்தமும் "யார் உள்ளே இருப்பது?" "திற கதவை!" என்று அதட்டும் குரலும் கேட்டன.

முத்துசாமி கதவைத் திறந்துவிடும் எண்ணத்துடன் காலை முன்னுல் ஓரடி பெயர்த்தான். ஒளிய வந்தவன் மண்டியிட்டு முத்துசாமியின் முழங்கால்இரண்டையும் பிடித்துக்கொண்டு அழாக்குறையாகஅவனைப்பார்த்தான். அந்தப் பார்வை "ஐயா என்னைப் பிடித்துக் கொடுத்து விடாதே!" என்று கெஞ்சிக் கதறுவதுபோல் இருந்தது.

முத்துசாமி ஒன்றும் தோன்றுமல் திக்பிரமை பிடித்தவன்போல் நின்று கொண்டிருந்தான். அப்போது வெளியில்;

"ஏனய்யா 401, 202, அட என்னய்யா குடியில்லாத வீட்டிலே வந்து நின்று கொண்டிருக்கிறீங்க. எந்தப் பக்கம் ஓடுருண்ணு பாருங்கய்யா என்றது ஒரு குரல்.

"சார், அவன் இந்தப் பக்கம்தான் ஓடி வந்தான். இந்த வீட்டிலேதான் நுழைஞ்சிருக்கணும். இதற்கப்புறம் வீடுகளும் இல்லே! பதுங்கிறதுக்கு இடமும் இல்லே சார்!" இது பதில் குரல்.

"ஆமாய்யா இந்த வீட்டிலே நுழையறபோது பார்த்தாயா?" முதற் குரல்.

"இல்லேசார், அந்தப் பக்கமெல்லாம் வெட்ட வெளியா இருப்பதாலே இங்கேதான் ஒளிஞ்சிருப்பான்னு உத்தேசமாச் சொல்றேன் சார்!" 2—ம் குரல்

"அடபோய்யா, உனக்குப் போயி பிரமோசனுக்கெல்லாம் சிபார்சு செய்திருக்கேன் பாரு?' இந்தாய்யா இந்த வீட்டிலே ஆட்கள் குடியிருக்கிற அடையாளமாவது இருக்குதாய்யா? இது யாரு வீடுண்ணுவது தெரியுமாய்யா?"

முதல்குரல் இப்படி அதட்டிவிட்டு ஏம்மா! இந்தாம்மா!! இங்கே வா!!! இந்த வீட்டிலே யாரு குடியிருக்கிரு?" என்றது.

'இது உதிரமாடக் கொத்தனுர் வீடுங்க. அவரு செத்து பத்துப் பன்னெண்டு வருசமாச்சுங்க. அவரு செத்தபிறகு இதிலேயாரும் குடியிருக்கலீங்க" என்றது ஒரு பெண் குரல்.

'ஏம்மா, அந்தக் கொத்தனுருக்குப் பெண்டாட்டி பிள்ளை ஒருத்தரும் இல்லையா?" என்றது 2—ம் குரல்.

"கொத்தனுரு பெண்டாட்டி அவருக்கு முந்தியே செத்துப் போயிட்டாங்க. அவருமகன் ஒரு பய இருக்கானுங்க-முத்தன்னு பேருங்க, அந்தப்பய இந்த வீட்டுக்கு வாரது போறது கூடத் தெரியலிங்க. அவன் அழுகிணியாபிள்ளை காப்பிக்கடையிலே வேலை செஞ்சுக்கிட்டு பிழைச்சுக்கிட்டிருக்காங்க" என்றது அந்தப் பெண்குரல்.

"பார்த்தயாய்யா 401! அடைச்ச வீட்டிலே வந்து தட்டிக்கிட்டு நிற்கிறீங்க" என்றது 2-ம் குரல். தான் சொன்னதும் யூகித்ததும் சரி என்கிற பாணியில்:

"சார், அவன் இந்த வீட்டிலேதான் இருக்கணும் கதவைத் திறந்தால் பிடிச்சிடலாம் சார்" என்றது 401-ன் குரல்.

அட பேசாமே வாய்யா! கதவைத் திறக்க என்ன பவர் வச்சிருக்க? காம்பிலிங்க் கேசிலே ஸ்பார்ட்டிலே விட்டுட்டேன் வீட்டுக்குள்ளே போயி பூட்டிக்கிட்டான்னுசொல்லி, மானத்தை வாங்கிப் போடாதே! பேசாம ஸ்டேசன்லே போயி இருங்க!"

மீண்டும் டக், டக் என்னும் செருப் பொலி கேட்டது.

இத்தனை நேரமும் முத்துசாமியின் காலைக் கட்டிக்கொண்டு நடுங்கிக்கொண்டிருந்த காம்பிலிங்க் கேசுப் பேர் வழிக்கு, போலீசார் போய்விட்டார்கள் என்று தெரிந்ததும் நடுக்கம் தீர்ந்து தைரியம் பிறந்தது.

முத்துசாமியின் முழங்காலை விட்டு விட்டு மெதுவாக எழுந்து போய் "போலீசார் போய்விட்டார்களா?" என்று கதவிடுக்கின் மூலம் கவனித்தான்.

அவர்கள் போய்விட்டார்கள் என்று நன்ருய்த் தெரிந்த பிறகு முத்துசாமியிடம் வந்தான்.

"அண்ணே, நீங்கசெஞ்ச உபகாரத்தை மறக்க மாட்டேன் அண்ணே. நீங்க நல்லா இருப்பீங்க"

"ஆமாப்பா நீ யாரு? போலீசுக்காரங்க எதுக்காக உன்னைத் துரத்திக்கிட்டு வந்தாங்க?

சூதுப்புலி சுப்பையா,ங்கிறது! நீங்க கேள்விப் பட்டிருப்பீங்க!"

"அடடே நீயா! கேள்விப் பட்டிருக்கேன்! உன்னை எதுக்குத் துரத்திக்கிட்டு......?'

"அதுதான் அவங்கசொன்னுங்களே அண்ணே காம்பிலிங்குக்கேசுண்ணு!'

காம்பிலிங்குண்ணு...?

"காம்பிலிங்குண்ணு சூதாட்டமிண்ணு அருத்தம்! தெரிஞ்சதா? நானும் இன்னும் நாலைஞ்சு பேரும் இந்தப் பக்கம் ஒரு ஓடையிருக்குல்லே ஓடை., அதிலே சூதாடிக் கொண்டிருந்தோம். அது எப்படியோ அந்தக் கழுகுப் பயகளுக்கு மூக்கிலே வேர்த்து விளையாடற இடத்துக்கே வந்துட்டாங்க...!"

"அப்புறம்?"

"அப்புறம் என்ன? திசைக்கொருத்தனு நாங்க ஓடிப்போனேும் அவ்வளவுதான்!"

"உன்னை துரத்திக்கிட்டு மாத்திரம் நாலைஞ்சுபேரும் வந்திருப்பாங்க போல இருக்கே? அதென்ன அப்படி?"

"அதா! நான்தான் இந்த ஊரிலே காம்பிலிங்கு கேடி! அதுனுலே என்னைக் கண்ணுவச்சு இத்தனை பேரும் வந்திருக்காங்க!"

"அப்படிச் சொல்றியா வெசயத்தை! சரி; இன்னிமே இதுக்கெல்லாம் போகாதேப்பா! போலீசுக்காரங்க கிட்ட ஆப்பிட்டுக்கிட்டா தோலை உரிச்சுப்பிடுவாங்க! எதுக்குத் தொல்லை!"

"என்ன செய்றதண்ணே, எப்பயாச்சும் ஒரு நாளைக்கி இந்தப் பயககிட்டே ஆப்பிட்டுக் கிடறதான் அதுக்குப் பயந்தா பொழைக்க முடியுமா? லாபத்தைப் போல நட்டமும் வருமிலே

"இதுலே என்ன பொழப்பிருக்கு? சூதாடுறவங்களுக்கு யாராச்சும் கூலி கொடுப்பாங்களா? இல்லே வச்ச பந்தயமெல்லாம் கெலிச்சிடுமா?"

"நான் பந்தயங் கெட்டி சூதாட மாட்டேண்ணே! நான்தான் மேசைக்காரன்! எனக்கெதுக்கு நட்டம் வரப்போகுது?

"மேசைக்காரன்னு என்ன? தெரியலியே!"

'இது தெரியாதா? மேசைக்காரன்னு அவன்தான் சூதாட்டத்துக்கே நிர்வாகி. நீதிபதி, எல்லாம்! அவனுக்கு ஆட்டத்துக்கு இவ்வளவுன்னு துட்டு குடுப்பாங்க!'

"அப்பிடி குடுக்கிறதுலே எவ்வளவு வரும்? கட்டும்படியா இருக்குமா?"

"என்னண்ணே இப்பிடிக் கேக்கிறே! ஆட்டம் நடக்கிற மும்முரத்துக்குத் தக்கின, ரெண்டு, மூணு. அஞ்சு. பத்து கிடைக்கும். எவனுக்காவது ரொப்பக் கெலிச்சிருந்தா அவன் ஏதாச்சும் ஒண்ணு ரெண்டு எனும் தருவான். எல்லாம் சேர்த்தா எஞ் செலவுக்கு தாராளமா இருக்குமண்ணே!"

"அடடே! நல்ல வரும்படி இருக்குண்ணு சொல்லு! பரவாயில்லியே!"

"அண்ணே நான் ஒண்ணு சொல்றேன் கேக்கிறியா? உனக்கும் நல்ல வரும்படி இருக்கும்!"

"என்ன சொல்றே! சொல்லேன்!"

"இந்த வீடிருக்கே, இது ஒங்க வீடு தானேண்ணே?"

"ஆமா, அதுக்கென்ன?"

"இந்த வீடு ஊருக்கு ஒதுக்குப்புறமா பொம்பளைங்க பிள்ளைங்க இல்லாம இருக்குல்லே?"

"ஆமா"

"இதிலே நம்ம சூதாட்டக் கச்சேரியை நடத்த சம்மதிச்சாண்ணே, உனக்கும் நல்ல வரும்படி இருக்கும் எங்களுக்கும் சௌரியமாயிருக்கும்! என்ன சொல்றே?"

முதலில். முத்துசாமி இந்த ஏற்பாட்டை ஒப்புக்கொள்ளத் தயங்கினுன். பிறகு ஒருவாருக ஒத்துக் கொண்டான். மறுநாள் முதல் அந்த வீடு சூதாட்டக்களமாயிற்று.

அதிலிருந்து அவனுக்கு நாள் தோறும் இரண்டு மூன்று ரூபாய்க்குக் குறையாமல் 'மேசைக்காசு' கிடைத்துக் கொண்டிருந்தது.

இந்த வரும்படி, அவன் வாழ்நாளிலேயே கண்டறியாததாக இருந்தது.

ஏனென்ருல், அவன் பிறந்த இத்தனை காலத்திலும் ஒரு முழு ரூபாயைக் கூட தன்னுடையது என்றஉரிமையுடன் கையில் வைத்திருந்ததும் இல்லை-செலவழித்ததும் இல்லை!

அப்படிப்பட்ட அவனுக்கு தினசரி இரண்டு மூன்று ரூபாய் கிடைத்து வந்தால் கேட்க வேண்டுமா?

இரண்டொரு தினங்களுக்குள்ளாகவே அழுகணியாபிள்ளை ஓட்டல், செக்குப்பேட்டை இவற்றின் அலுவல்களை உதறி எறிந்தான். சூதாட்டக் கச்சேரியிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தான்.

இப்போது முத்துசாமிக்குப் போக்கிரிகளும், சோம்பேறிகளும், முடிச்சவிழ்ப்பவருமாக ஏராளமான நண்பர்கள் ஏற்பட்டார்கள்.

(தொடரும்)

ரோம்--நாகரிகச் சின்னம்

உலக வரலாற்றில் பழம் பெரும் நாகரிகத்திற்கு உரிமையான பொன்னேட்டைப் படைத்த பெருமையில் பங்கு கொண்ட மிகச் சில இனத்தவர்களில் ரோமானியர்களும் சிறப்பான இடத்தைப் பெற்றவர்களாவர்.

மற்ற இனத்தவர்களைப் போலவே' எல்லாத் துறையிலும் வளர்ச்சி பெற்று விளங்கிய அவர்களுக்கு தங்களுக்கெனத் தனி வரலாறு, இன்றும், நம்மால் தெளிவாக அறிந்துகொள்ளும் அளவுக்கு அமைந்துள்ளது. பிற தொன்மை நாகரிக இனத்தாரின் பெருமையைச் சுட்டி நிற்கும் சான்றுகளைவிட ரோமானியர்களுக்கென இருப்பவை மிகுதியே ஆகும்.

திராவிட எகிப்திய நாகரிகங்களை விளக்க எத்தனையோ ஆதாரங்கள் இருப்பினும், காலத்தின் விளைவுகளால் உருமாறிப் போகாத நிலைத்த காட்சியாக விளங்குபவை அருமையிலும் அருமையாக இருக்கின்றன. அவர்கள் வளர்ந்து வாழ்ந்து இயற்கைப் போக்கால் மாறினும் அழியாத நாகரிகச் சின்னம் ஆராய்ச்சி அளவிலேயே இருக்கிறது. ரோமானியர்களுக்கு நிலைத்திருக்கும் வீர வரலாறுகளுக்கெல்லாம் முதற் பொருளாக அம்மக்களின் புகழ் பாடி நிற்கும் நாகரிகச் சின்னமாக தொன்மையை விளக்கும் சரித்திர ஏடாக—இன்று விளங்கி இருப்பது ரோம் நகரம்.

இயற்கைக் கோளாறுகள் நேர்ந்த போதும், பிறர் நுழைந்த காலத்திலும், பகை புகுந்த வேளையிலும், அழிவினை அணைத்து, மறையாத பெருமையை உலகத்தில் ரோம் நகரைத் தவிர வேறு எதுவுமே இன்றுவரை பெற்றதில்லை—இனியும் பெறுவது அருமை!

அந்த எழில் நகரத்தின் ஒவ்வொரு கதவும் அளவிறந்த நூல்களுக்குக் கருப்பொருளாகும்; ஒவ்வொரு சுவரும் சுவையான வரலாற்றுக்கு இருப்பிடம்; ஒவ்வொரு படியும் காவியங்களின் முதற்பொருள்; கண்ணில் படுவன வெல்லாம் ஓவியக்கலையின் உயிருட்டம் கைபடும் இடமெல்லாம் கலையுணர்ச்சியின் பிறப்பிடம்.

நிலத்தின் ஒவ்வொரு அடி மண்ணும் ஒவ்வொரு சம்பவத்தைத் தாங்கிக் கிடக்கும். கற்கள் எதுவும் வீணானவையல்ல—பொங்கி வழியும் நீருற்றுக்கள்—அதன் புகழ்பாடிக் களிக்கத் துடிக்கும் உணர்ச்சிப் பொங்கல். வீசிச் செல்லும் காற்று ரோம் நகரத்தின் பெருமை மணத்தில் தோய்ந்து நின்றே பயணத்தைத் தொடங்கும்.

இத்தகு பேரும், சீரும், தொன்மையும் படைத்த அப்பெரு நகரம் தனது வரலாற்றை இன்னமும் உலகுக் காட்ட இயலாது அமைந்து நிற்கிறது. யாரால் எப்பொழுது தோற்றுவிக்கப்பட்டதென்று இதுவரை கண்டுகொள்ள முடியவில்லை. அதன் தோற்றத்தைப் பற்றி எண்ணிறந்த கதைகள் உலவுகின்றன.

தைபர் ஆற்றின் கரையில் அமைந்திருக்கிறது. 'ருமான்' என்றால் ஆற்றங்கரையில் அமைந்துள்ள நகரம் என்று பொருள். ஒரு வேளை அது அமைந்திருக்கும் இடத்தைக்கொண்டு ருமான் (Rumon) எனும் சொல்லிலிருந்து மருவி ரோம் என மாறியிருக்கலாம் என்று கருதுகின்றனர்.

பழங்கதைகளிலொன்று ரோமுலஸ் (Romulus) என்பவனால் இந்நகரம் உருவாக்கப் பெற்றதென்றுகூறுகிறது. ரோமுலஸ் என்பான் இரட்டைக்குழந்தைகளில் ஒருவன். பிறந்தபோது பொறாமை கொண்ட உறவினர்களால் கொலை செய்வதற்காகத் தூக்கிச் செல்ல, வழியில் ஒரு ஓநாயால் காப்பாற்றப்பட்டானும். அங்ஙனம் காப்பாற்றப்பட்ட அவனே பின்னாளில் மாவீரனாக மாறி பேலட்டின் மலை (Palattine hill) மீது ஒரு நகரத்தை நிருமாணித்தான். எனவே அவனுடைய பெயரால் ரோம் என வழங்கி வருவதாகக் கருத்து நிலவுகிறது. சிலர். அது உண்மையான ஓநாய் அல்லவென்றும் உழவர்குடியில் பிறந்த ஒருத்தி தனது தீய நடத்தைகளால் அங்ஙனம் அழைக்கப்பட்டாள் என்றும் அவளே ரோமலஸைக் காப்பாற்றி வளர்த்தாளெனவும் சொல்லுகின்றனர்.

இன்னொரு கதைவேறுவகையானது' மத்திய காலத்தில் (Middle ages) மூன்றாவது போப் இன்ன சென்ட் என்பார் அநாதைகளுக்காக ஒரு மருத்துவமனை நடத்தி வந்தார். அங்குள்ள வேண்டாத குழந்தைகளையும் ஆதரவற்ற சிறுவர்களும் அம்மனையில் சேர்க்கப் பெற்றனர் மனையின் முன்வாயில் ஒருமணியும் வளையத்தில் மாட்டியிருக்கும் தொட்டிலும் இருந்தன. குழந்தையைத் தொட்டிலில் இட்டு மணியை ஒலிக்கச் செய்தால் வளையம் சுற்றும். குழந்தை உள்ளே சென்றதும் பணிப் பெண்கள் எடுத்துக் கொள்வர். அங்கு வளரும் குழந்தைகளுக்கு அநாதை அல்லது கண்டெடுக்கப் பட்டது எனப் பெயர் சூட்டினர். இன்றும் ரோம் நகரில் அநாதை (Proietti) என்கிற பெயருடைய குடும்பங்கள் பல உள்ளன. அவர்களின் முன்னோர்களில் ஒருவன் இந்த நகரத்தைத் தோற்றுவித்திருக்கலாம்.

வரலாற்றுக்கு முற்பட்ட நூற்றாண்டுகட்கு முன்பிருந்தே ரோம், இலத்தின் இத்தாலிய மொழிகளில் ரோமா என வழங்கப் பெற்றுள்ளது. ரோமா (Roma) என்கிற சொல்லைத் திரும்ப உச்சரித்தால் உண்டாகும் சொல்லுக்கு (amor) அழகு என்று பொருள். அதன் உளங்கவரும் எழிலால் ரோம் எனக் காரணப் பெயராகக் கொள்வதற்கும் இடமுண்டு.

ரோமர்களின் நாகரிகச் சின்னமான ரோம் நகரம் முதலில்வாளாலும் பின்னர் சிலுவையாலும் இறுதியாக அதன் அழகாலும் வெற்றி கொள்ளப் பட்டது.

அந்த அழகு நகரை நெருங்கும் போதே கண்ணில் படும் நீண்ட உயர்ந்த சுவரும், செயற்கைக் கால்வாயின் கரையில் செல்லும் அழகிய பெருஞ்சாலையும், நம்முடைய உள்ளத்தில் ஆர்வமுத்திரையைப் பதித்து விடுகின்றன. சாலையைத் தொட்ட வண்ணமே ஓடிக் கொண்டிருக்கும். எடுப்பான தோற்றமுடைய அச்சுவர், சுமார் கி, மு. 400-ம் ஆண்டில் கட்டியது. கால்வாயும் சாலையும் கிருத்து பிறப்பதற்கு முன்னரே அமைக்கப்பட்டவை இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் வாய்க்கால் வழியாக நகருக்குள் கொணர்ந்த நீர் இன்றும் தண்மையையும் இனிமையையும் குறையாமல் அளித்து வருகிறது.

நகரில் 1300-க்கு மேற்பட்ட நீருற்றுக்கள் உள்ளன. அந்த நீருற்றுக்கள் ஒவ்வொன்றும் ஒரு அழகான கதையைச் சொல்லக் காத்திருக்கும். அவற்றில் சில தனிச்சிறப்பு வாய்ந்தவை. அம்மக்களுடைய நம்பிக்கையில் பல திறப்பட்ட ஆற்றல் அவற்றிற்கு இருப்பதாக இன்னமும் நிலவி வருகிறது. ஒரு ஊற்றிற் சுரக்கும் நீரினை உண்டால் குழந்தை பிறக்குமாம். இன்னொன்று ஆண்களின் காதலில் வெற்றியைத் தருமாம். பிரிதொன்று பெண்களின் எண்ணங்களை நிறைவேற்றுமாம். இன்றும் அவர்களுக்கு இத்தகைய நம்பிக்கை அவற்றின் மீது குறையவில்லை.

அங்குள்ள புகழ்வாய்ந்த இடங்களிலொன்று 'ஸ்பானியப் படிகள்' (Spanish steps) அங்கு செல்லும் இளைஞர்கள் தங்களை விரும்பும் குமரிகளைத் தேர்ந்தெடுக்க ஓர் சோதனை இடம். அந்த இடத்தில் மூன்று மலர்க்கடைகள் இருக்கின்றன. படிகளில் இறங்கி வரும் பெண் இடது புறமுள்ள சிறு கூடத்தில் நுழைவாளாயின் தனது விருப்பத்தை ஏற்றுக் கொண்டாள் என்பதாகும். வலப்புறம் இறங்கிச் செல்வாளாயின் மறுத்து விட்டாளென்றும், நடுப்புற வழியே வந்தால் உறுதியாகச் சொல்ல இயலவில்லை யென்றும் புரிந்து கொள்வர்.

அடுத்து, வருவோரது மனதைக் கவருவது அங்குள்ள வட்டவடிவமான 'பெரும் அரங்கு.' அது 'கொலோசியம்' (Colosseum) என அழைக்கப் பெறும் நீரோமன்னனின் மிகப் பெரிய உருவச் சிலை அதன் அருகில் இருப்பதால் அங்ஙனம் பெயரிட்டிருக்கலாம். 'அப் பெரும் அரங்கு' கட்டத்துவங்கும் பொழுது ரோம் நகரம் தோன்றி 800 ஆண்டுகளுக்கு மேல் கழிந்திருந்திருந்தது. கி. பி. 720-ம் ஆண்டில் அந்தப்பணி ஆரம்பமாயிற்று. கட்டி முடிக்க எட்டு ஆண்டுகளாயின. அதில் அமைந்துள்ள பொறியியல் வன்மை இன்றும் முழுதும் புரிந்து கொள்ள முடியாத அளவு திறமையாக நிறுவப்பட்டிருக்கிறது. இது பற்றிய இன்னுமொரு வியப்பு என்ன வென்னில் அரங்கு கட்டுவதற்கு முன்பு அந்த இடம் பெரிய ஏரியாக இருந்தது. சதுப்பு நிலமான அப்பகுதியில் இது உருவாக்கப்பட்டுள்ளது.

ரோம் நகரத்திலுள்ள சுரங்கம் போன்ற புதை குழிகள் மற்றுமோர் வியப்பூட்டும் இடமாகும். எத்தனை புதை குழிகள் அங்கிருக்கின்றன வென்பது யாருக்கும் தெரியாது. இதுவரை ஐம்பது புதை குழிகளை கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அப் புதை குழிச் சுரங்கள் 600 கல் தொலைவுக்குக் குடையப்பட்டிருக்கின்றன. கிருத்துவ மதத்தின் துவக்ககாலத்தில் கொடுமைகளுக்கு அஞ்சி மறைந்து வழிபடுவதற்காக இத்தகைய புதை குழிச் சுரங்கள் பயன்படுத்தி வந்ததாகக் கூறுகின்றனர். சில கொடுமையான மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் கிருத்தவர்களது மத உரிமை முற்றிலும் பறிக்கப் பட்டது. ஒரு சமயம் நூற்றுக் கணக்கான கிருத்துவர்களைக் காவலாளிகள் இச் சுரங்கப் புதை குழிக்குள் அனுப்பினராம். அவர்களனைவரும் உள்ளே போய் வழிபாட்டில் ஈடுபட்டதும் குழிகளை மூடி விட்டனராம். அத்தனை பேரும் அங்கேயே மடிந்தனர்.

ஒரு காலத்தில் புதிய ஜெருசலம் எனப் பெயர் பெற்ற புனித ரோம் நகரம், கிருத்துவப் பயணிகளால் நாளடைவில் உண்மையான ஜெருசலமாக மாறிவிட்டது. 15 நூற்றாண்டுகளாகப் பயணிகள் அங்கு வந்து போய்க் கொண்டுள்ளனர். சில சமயங்களில் பெரிய சிலுவைகளைச் சுமந்த படி, தங்களது மதவழி பாட்டினைக் காட்ட ஆயிரக்கணக்கான கற்களை கால் நடையாகவே கடந்து வருவதுண்டு.

அங்கு வருவோர் தங்களது பக்தியின் அறிகுறியாக தூய ஜான் லேட்டான் (St John Lataron) எனும் கோயிலிலுள்ள, பளிங்குகளாலான 28 படிகளையும் முழுங்கால்களால் ஏறிச் செல்ல முனைவர். ஒவ்வொரு படியிலும் பிரார்த்தனை செய்வர். இதற்கு 'புனிதப் படிகள் என்று பெயர். இப்படிகள் மாமன்னன் கான்ஸ்டான்டினுடைய அன்னையால் கொண்டுவரப் பெற்றதெனக் கூறுவர். இயேசுநாதர் சிலுவையிலறையக் கொண்டு செல்லப் படும் பொழுது இவற்றின் மீது நடந்து போனாரெனவும் அப்படிகளின் மீதுள்ள கறையை அவரது இரத்தம் எனவும் வழங்கப்படுகிறது.

இருபத்தெட்டுப் படிகளையும் அங்ஙனம் கடந்து சென்றுவிட்டால் ஆயிரம் ஆண்டுகள் வரை வாழலாமென்ற ஓர் நம்பிக்கையுண்டு. பலர் அந்த முயற்சியில் ஈடுபட்டனர். கடந்த 200 ஆண்டுகளில் மூன்று முறை அவை செப்பனிடப்பட்டன.

இதன் வரலாற்றில் ஒரே ஒரு மனிதன் பாதிவரை சென்றதாகவும், பாதி வழியிலேயே மூளைக் கோளாறு ஏற்பட்டதால் திரும்பிவிட்டதாகவும் சொல்லப்படுகிறது. கதைகளில் அந்த முயற்சியிலீடுபட்டவர் மார்டின் லூதர் எனக் கூறுகிறார்கள்,

இவைமட்டு மல்லாது ரோம் நகரத்தில் அதன் வனப்பையும் வரலாற்றுப் பெருமையையும் காட்டி நிற்கும் கட்டிடங்கள் ஏராளமாக உள்ளன. அவையனைத்திலும் கிருத்துவ மதக் கோட்பாடுகளும். கொள்கைகளும். நிறைந்திருந்தாலும் அவற்றில் மிளிரும் கலைச் செல்வங்கள் அவை உருவோடு நின்று விளங்கும் தன்மை அனைவரையும் தன் வயப்படுத்தும் ஆற்றல் மிக்கவை.

அங்குள்ள ஆலயங்கள் ஒவ்வொன்றும் உருவாக்கப்படும் போது அளவில்லாத சம்பவங்களைச் சந்தித்திருக்கின்றன. தனித்தனிப் பெருமையோடு கூடிநின்று ரோம் நகரத்தைக் கலைவீடாக-தன் மக்களின் நாகரிகச் சின்னமாக அவர்களது வாழ்வையும் வலிமையும் வற்றாத கற்பனைத் திறனையும் செயலாற்றலையும் எடுத்து இயம்பிய வண்ணம் நிமிர்ந்த நோக்குடன் எழில் கொழிக்க விளங்கி வருகிறது.

ஒரு நூலாசிரியன், ரோம் நகரத்தை முழுதும் அறிந்து கொள்ள முயன்றால் குறைந்தது ஐந்து ஆண்டுகளைச் செலவழிக்க வேண்டும்' என்று சொன்னான்.

இன்றைய உலகில் அழகின் இருப்பிடம் எது என்றால் பாரிசைக் குறிப்பிடுவர். இது தெரிந்தவர்கள் கூற்று ஆனால் நேரில் கண்டவர்கள் 'எழிலின் திருவுருவம் ரோம்'தான் எனஉறுதியாக ஒப்புக் கொள்வர்.

உடுமலை பண்ணன்.

✶

விலைவாசி இறங்காதது ஏன்?

எம். எஸ். இராமசாமி

— சென்ற இதழ் தொடர்ச்சி —

இந்த வகையில், ஆங்கிலேயர்கள் நடத்திய ஏகபோக வியாபாரம், போகபோக்கியப் பொருட்கள்தான் என்று, சொல்லத் தேவையில்லை.

நாகரிக வாழ்க்கைச் செலவில் ஜீவாதாரச் செலவைவிட போக போக்கியச் செலவுதான் அதிகம் என்று ஏற்கனவே கூறினோம். அந்தச் செலவில் பெரும் பகுதியை ஆங்கில ஏகாதிபத்தியம் தனது வியாபார வருவாயாக அடைந்துகொண்டிருந்தது.

இதனால், இந்தியத் துணைக் கண்டத்தில் உடல் உழைப்பைக் கொண்டிருக்கும் ஏழைகளுக்கு நன்மையும் இல்லை - தீமையும் இல்லை. பொருளாதார மூலங்களான ஆலைகள் - ஏற்றுமதி இறக்குமதி வியாபாரங்கள் ஆகியவற்றை நம்பி இருப்போருக்கு விருப்பப்படி கொள்ளையடிக்க இசையாமல் இருந்தது.

வடவர் ஆதிக்கம் ஏற்பட்ட உடனே, அந்த ஆதிக்கத்தை நேரடியாகவோ மறைமுகமாகவோ கைப்பற்றிக் கொண்டிருப்பவர்கள் ஆலையரசர்களும் ஏற்றுமதி இறக்குமதி வணிகர்களும் தான் என்று கூறத்தேவையில்லை.

இன்றைக்கும் மிகப்பெரும் ஆலையரசர்கள் - ஏற்றுமதி இறக்குமதி நடத்துவோர்களில் மிகப் பெரும்பாலோர் வடநாட்டினரே.

அவர்களே ஆதிக்கக்காரர்களாகவும் இருப்பதால், நாட்டைக் கொள்ளையடிப்பதற்கு ஏதுவாக - விலைவாசி இறங்கும் மார்க்கங்களை - வாசல்களை - அடைத்துவிட்டிருக்கிறார்கள்.

தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் பல்வேறு இறக்குமதிப் பொருட்கள் தடுக்கப்பட்டுள்ளன.

எடுத்துக் காட்டாக ரேயான் Rayon உற்பத்தியையும், சாய மருந்து (Dyes and chemicals) களையும் கூறலாம். முன்பெல்லாம் இத்தாலி, ஜப்பான், ஜெர்மனி ஆகிய நாடுகளிலிருந்து ரேயான் இறக்குமதி செய்யப்பட்டன.

இந்தியாவில் திருவாங்கூரில் ஒரு ரேயான் உற்பத்தி ஆலையும் பம்பாயில் இரண்டு ஆலைகளும் ஏற்படுத்தப் பட்டன. இவற்றில் உற்பத்தியாகும் ரேயான்கள் தேவைக்குப் போதுமான அளவு இல்லாதிருப்பதுடன் தரமும் தாழ்ந்ததாகவே இருக்கிறது.

இருந்தும், ரேயான் ஆலை அதிபர்களுக்கு மிகவும் வேண்டியவரான திரு லால்பகதூர் சாஸ்திரி மத்திய அமைச்சர் பொறுப்புக்கு வந்ததும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான ரேயான் முழுவதையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து உள்நாட்டு ரேயான்கூட கள்ளச்சந்தையில் கிடைக்கும் நெருக்கடியை உண்டாக்கிவைத்தார்.

சாயமருந்து உற்பத்தி ஆலைகள் இரண்டொன்றை வடநாட்டில் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில்தொடங்கினர். அந்த ஆலைகளின் உற்பத்தி தேவையைவிட மிகமிகக் குறைவு. தரமோ அதைவிடக் குறைவு. இந்த நிலைமையில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே சுவிட்சர்லாந்து, ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் ஆகிய, பல்வேறு நாடுகளிலிருந்து இறக்குமதியான சாயமருந்துகள் அத்தனையும் கட்டுப்படுத்தி, அதுபோலவே 'ஹைட்ரோசல்பேட்' போன்ற சில பல கெமிக்கல் வகைகளையும் தடுத்து, சாய மருந்து வகையே கள்ளமார்க்கட்டில் செலவாகும்படி செய்திருக்கிறார்கள்.

இப்படியே எல்லாப் பண்டங்களும் கள்ளச் சந்தையில் செலவாகும்படி செய்துவிட்டதால், விலைவாசிகள் யுத்தகாலத்தை விட இப்போது அதிகமாக உயர்ந்திருக்கின்றன.

நாட்டின் விலைவாசி ஏற்றத்திற்கு கள்ளச் சந்தையும் கட்டுப்பாடும் எவ்வளவு காரணமோ அவ்வளவு காரணம் பொருளாதார வீக்கமும் ஆகும்.

பொருளாதார வீக்கம்

யுத்த காலத்தில் போர்த் தளவாடங்கள் சேகரிப்பதற்காக அரசாங்கம் கடனாளி ஆகிவிடுகிறது.

நாட்டில் விநியோகமாகும் ஒவ்வொரு கரன்சி நோட்டும் சர்க்காரின் கடன்பத்திரங்களே.

இவ்வாறு அரசாங்கம் கடனாளியாக மாறும்போது பொதுமக்களிலே பணக்காரர்களாயிருப்பவரிடத்திலும் மத்திய தர வாழ்க்கையாளரிடத்திலும் பொருட்கள் தட்டுப்பாடாகி நோட்டுகள் அதிகமாகத் தங்குகின்றன.

ஏனெனில் பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், பணக்கார—மத்திய தர வாழ்வினரே அதிதேவதையாக இருப்பார்கள். ஏழைகளின் ஒரே செல்வம் அவர்களுடைய உடல் உழைப்புத் தான்.

ஆதலால் பொருளாதார வீக்கம் — தட்டுப்பாடு — எதுவும் ஏழைகளுக்கு சம்பந்தமில்லாதவைகள்.

நாம் இங்கே பொருட்கள் என்று குறிப்பிடுவது கரன்சி நோட்டையோ, நாணயங்களையோ அல்ல—பயன்படு பண்டங்கள்—தளவாடங்கள் வியாபாரப் பொருட்கள் ஆகியவற்றையே பொருட்கள் என்று கூறுகிறோம்.

அத்தகைய பொருட்களை அரசாங்கம் ஏராளமாகக் கொள்முதல் செய்து போருக்காகவோ வேறு காரியங்களுக்காகவோ தேக்கிவைக்கும்போது, நாட்டில் பணநடமாட்டம் அதிகப்பட்டு பொருட்களின் இருப்புக் குறைந்து போகிறது.

உற்பத்திப் பொருட்கள்-விளை பொருட்கள்—கிடங்கில் தங்காமல், கரன்சி நோட்டுகளை வாங்கிக் கொடுத்துவிட்டு மறைந்து விடுகின்றன. சரக்குக்கு கிராக்கி வந்து விடுகிறது. சரக்குக்கு ஏற்பட்ட கிராக்கியைக் கண்டதும், விற்பனை செய்பவன் விலையை ஏற்றுகிறான். விலைகள் படிப்படியாக உயர்ந்து விடுகின்றன.

இப்படிப்பட்ட கிராக்கி நிலைமை, போர்க்காலத்தில் மட்டுமல்ல ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் ஏற்பட்டு தட்டுப்பாடு ஏற்பட்டுவிடுகிறது.

இந்திய அரசாங்கத்தின் ஓரவஞ்சனைத் திட்டங்களான முதலிரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களால் கட்டிட சாமான்களின் விலை தாறுமாறாக ஏறிவிட்டது.

எடுத்துக்காட்டாகப் பலவற்றைக் கூறலாம். இங்கே சிலவற்றைக் குறிப்பிடுவோம்.

இந்தியாவிலேயே தேக்கு, கருங்காலி (தோதகத்தி) கருமருது, வேங்கை, காராங்கி முதலிய உயர்சாதி மரங்கள்—கட்டிடங்களுக்குத் தகுதியானவை—தென்னாட்டு மேற்குமலைத் தொடரில்தான் அதிகமாக உற்பத்தியாகின்றன.

அப்படி உற்பத்தியாகியும் கடைகளில் இந்த மரங்களைக் காண்பது அரிதாகிவிட்டது. மரங்கள் இருந்தால் தங்கம் விலை, வைர விலை சொல்கிறார்கள். இவ்வளவு விலை ஏறக் காரணம் என்ன?

அரசாங்கத்தின் கட்டிடச் செலவுகளுக்கு, மொத்தம் மொத்தமாக பெருந் தொகை கொடுத்து வாங்கப்படுவதால், அந்த மரங்கள் கடைகளில் வந்து தேங்கிக் கிடக்காமல் செலவாகி விடுகின்றன.

மரங்களை அடுக்குவதற்குப் பதிலாக நோட்டுகளை அடுக்கிக் கொண்டிருக்கிறார்கள்—பணக்காரர்கள்

இதுபோலவே இரும்பு, சிமிண்டு, சுண்ணாம்பு, ஆணிகள், தகடுகள், எதுவும் கடைக்கு வருவதில்லை.

4 அங்குல நீளமுள்ள ஆணி, கட்டிட வேலைகளுக்காக அதிக விலை கொடுத்து வாங்கப்பட்டால், கட்டிட வேலைக்குப் பயன்படாத மற்ற ஆணிகளையும் ஈவுப்படி விலையைக் கூட்டி விற்கிறான் வியாபாரி.

சிமிண்டு தேங்காமல் விற்பனையாகிறது என்று தெரிந்தால் போதும், சிமிண்டைக் கள்ளச் சந்தையில் விற்று விரைவில் பணக்காரன் ஆகிவிடவே ஒவ்வொரு வியாபாரியும் நினைக்கிறான்.

அரிசி பற்றாக்குறை என்பது உலகறிந்த ஒன்றாகி விட்டதால், பணக்காரர்கள் அறுவடைக் காலத்திலேயே போட்டி போட்டுக் கொண்டு வருடச் செலவுக்குப் போதுமான அரிசியை வாங்கி விடுகின்றனர்.

இதனால், உணவுப் பண்டங்களின் விலையேற்றம் நிரந்தரமாகி, வாழ்க்கைச் செலவும் உயர்ந்து விட்டது.

ஜீவாதாரப் பொருளாயிருந்தாலும் சரி; போக போக்கியப் பொருளாயிருந்தாலும் சரி; உள்நாட்டின் உற்பத்தி குறைந்து விலையேறி வருவதைத் தடுத்தாக வேண்டும்.

அப்படித் தடுப்பதற்கு "விலைக் கட்டுப்பாடுமுறை பயன்படாது" என்று, கடந்த கால அனுபவம் கூறுகிறது.

விலைக்கட்டுப்பாடுகள், பண்டங்களைப் பதுக்கிக் கள்ளச் சந்தைகள் தோன்றவே, துணை செய்கின்றன.

ஆகவே, விலைக்கட்டுப்பாடு தோல்விகண்ட-பயனற்ற முறை என்பதை, அரசினர் உணர வேண்டும்.

எந்தப்பொருள் தட்டுப்பாடாகி விலையேறுகிறதோ, அந்தப் பொருளை இறக்குமதிக் கட்டுப்பாட்டிலிருந்து விலக்கி, தாராள இறக்குமதிக்கு வழி செய்ய வேண்டும்.

அப்போதுதான் கள்ளச் சந்தை ஒழியும்-விலையேற்றமும் ஒழியும். நாட்டின் பொருளாதார வீக்கமும் குறையும்.

சிலர் கருதலாம், இவ்வாறு தாராள இறக்குமதி செய்ய அனுமதித்தால், இப்போதுள்ள பொருட்களின் உற்பத்தி விவரப்படி துணி உற்பத்தி ஒன்றுதான் போதுமானதாக இருக்கும். ஏனைய பண்டங்கள் எல்லாமே இறக்குமதி செய்ய வேண்டியதாக இருக்குமே; அதனால், நாட்டின் செல்வத்தை அயல் நாட்டுக்குக் கொட்டிக்கொடுக்க நேரிடுமே என்று.

உண்மைதான், ஆனால் இப்போதுள்ள நாட்டின் பொருளாதாரம் பொதுமக்களிடமும் இல்லை; அரசாங்கத்திடமும் இல்லை; மிகச்சில பணக்காரர்களிடம் போய்க் குவிந்து விட்டது-குவிந்து கொண்டே இருக்கிறது.

இதனால், ஏழை எளிய மக்கள் வாழ வகையின்றி—வருமானத்திற்கு மேற்பட்ட வாழ்க்கைச் செலவால் திண்டாடுகிறார்கள். இதை மாற்ற வேண்டுமானால், தேவைப் பொருள் எல்லாவற்றையும் வெளியிலிருந்து தாராளமாக இறக்குமதி செய்தாகவேண்டும்.

ஆனால், இப்போதுள்ள அரசாங்கம் வேறு; கள்ளச் சந்தை வணிகர்கள் வேறு; என்று, பிரித்துக் கூறமுடியாது.

எனவே, இந்த ஆட்சி தாராளமான இறக்குமதியை அனுமதிக்கும் என்று எதிர்பார்ப்பதற்கில்லை.

எடுத்துக்காட்டாக பர்மா அரிசி இறக்குமதியைக் கூறலாம்.

(தொடரும்)

நிலவு சுடுமோ?

இராம கண்ணப்பன்.

அவளை அவன் பார்த்தான்; அவனை அவள் பார்த்தாள். இருவரது கண்ணிமைகளும் படபடத்துப் பேசிக்கொண்டன. இருவரும் ஒருவரையொருவர் நோக்கியபடி மெய்மறந்து நின்றனர். அந்தக் கட்டிளங்காளை எதிரே நிற்கும் பூவண்ணத்தாளைப் பார்த்து மெல்ல இதழ் விரித்து நகைத்தான். அந்த நகைப்பால் அவளின் பொன்னவிர் மேனி புல்லரித்தது. அவள் முகத்தில் நாணம் செம்மைக் கோலமிட்டது. இதழ்க்கோடியில் புன்சிரிப்பு இழையோட அவள் நாணித் தலைகுனிந்தாள். குனிந்த அவள் தலையில் கொத்தாக முல்லைமலர் சூடப்பட்டிருந்தது தெரிந்தது. தவழ்ந்து வந்த தென்றலில் நன்முல்லையின் மென்மணம் கலந்து பரவியது. அந்த மென்மணம் அவன் மனதில் இன்பக் கிளுகிளுப்பை உண்டாக்கியது. விழித்த விழி இமைக்காது, பூம்பாவையின் வனப்பைப் பருகிக்கொண்டிருந்தான். அவள் நின்றுகொண்டிருந்தாள். அவன் பார்த்துக்கொண்டிருந்தான். சிறிதுநேரத்தில் பெண்கள் வரும் ஓசை கேட்டது. அவள் திடுக்கிட்டு நிமிர்ந்தாள். தன் இதயத்து ஆதவனைக் கனிவு ததும்பப் பார்த்துவிட்டுப் பூஞ்சிட்டைப் போல் பறந்துவிட்டாள் பூம்பாவை.

இன்பக்கனவு கலைந்ததைப் போல் அவன் துன்பத்தோடு பூம்பாவை போவதையைப் பார்த்துக்கொண்டிருந்தான்.

அவனை அவள் புரிந்துகொண்டாள்.

அவளை அவன் புரிந்துகொண்டான்.

நாட்களின் வளர்ச்சியில் அவர்கள் காதல் வளர்ந்தது. வாவிக் கரையிலும், வளர்பிறை இரவிலும், மேவிப்படர்ந்த நன்மலர்க் கொல்லையிலும் தொல்லை இல்லாமல் காதலை வளர்த்தனர். துன்பம் தொடராமல் இன்பத்தில் மிதந்தனர். காதல் சுகமாக வளர்ந்தது.

மணம் செய்துகொள்ள வேண்டாமா? ஊரறிய, உறவரிய ஒன்ருகிக் கைகோத்து ஊர் மெச்ச, இல்லறத்தை மேற்கொள்ள வேண்டாமா? ஒழிந்தும் மறைந்தும், ஊருக்கும் உறவுக்கும் அஞ்சி எத்துணை நாட்கள்தான் இருப்பது?

இருவருக்கும் மணம் புரிந்துகொண்டு வாழவேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. மணம் புரியவும், இல்லறம் நடத்தவும் பொருள் வேண்டாமா?

அவனோ சற்று எளியவன்; பொருளுக்கு எங்கே போவான்? வேற்றூர் சென்று பொருளீட்டி வருவதென முடிவு செய்தான்.

"அன்பே!"

"ம்...!"

"இன்றுதான் வெளியூர் போகிறேன் கண்ணே!"

"ஏன்?" அவள் பதறித் துடித்தாள்.

"பொருளீட்டி வந்து உன்னை மணம் புரிந்துகொள்ள,"

"அதிக நாள் சுணங்கிவிட மாட்டீர்களே...?"

"சுணங்குவேனு? இரண்டு திங்களில் வேண்டியதை தேடிக்கொண்டு வேகமாக வந்துவிடுவேன்!"

"போய்வாருங்கள் அன்பே!"

குரல் தளதளக்கக் கூறினுள் பூம்பாவை.

இருவரும் பிரியமுடியாமல் பிரிந்தனர்.

ஒரு கிழமை ஓடி மறைந்தது.

பிரிவு அவளைப் பெரும்பாடு படுத்தியது. பித்துப் பிடித்ததைப்போல் கலங்கித் தவித்தாள். அவளின் பொன்னவிர் மேனி பொலிவிழக்கத் தொடங்கியது. மலரை மறந்தாள்; மகிழ்வை வெறுத்தாள், உணவை மறந்தாள்; உறக்கம் வெறுத்தாள். எப்போது வருவார் என ஏங்கித் தவித்தாள். இரவுப் பொழுது அவளைக் கொல்லாமல் கொன்றது. பஞ்சணையில் புரண்டு புரண்டு படுத்தாள். பஞ்சணை முள்ளாகக் குத்தியது அவள் உடலெல்லாம். நித்திரை அவள் விழிகளை அணுக மறுக்கிறது. கண்ணை மூடினுலும் திறந்தாலும் கட்டழகன் எழில் வனப்பே எதிர்வந்து நிற்கிறது. வாவிக் கரையிலே, வளர்பிறை இரவிலே, மேவிப் படர்ந்த நன்மலர்க் கொல்லையிலே அவனேடு பேசிக் களித்திருந்த பேரின்ப நாட்களெல்லாம் நினைவில் நின்று நினைத்துருகச் செய்கிறது. அலை அலையாய் எழும் நினைவுகள் அவளை நிலைகுலையச் செய்கிறது. "ஒரு கிழமைக்குள் இந்நிலை என்ருல் மீத நாட்களை எப்படித் தொலைப்பேன்?" அவள் இப்படி எண்ணியபடி மனம் அமைதிபெற நிலா முற்றம் வருகிருள். அங்கே தோழி நின்றுகொண்டிருக்கிருள்.

பொன்நிலவு விண்வெளியில் உலாவருகிறது. தென்றல் சுகமாகத் தவழுகிறது. நிலவின் ஒளி தென்றலைவிடக் குளுமையாக இருக்கிறது.

ஆனுல் அவளுக்கோ...?

நிலவின் குளுமை நெருப்பாகச் சுடுகிறது. நினைவு அலைகள் மென்மேலும் எழுந்து அவள் மார்பைக் கொதிக்க வைக்கிறது. 'ஏ நிலவே, உன்னை எல்லோரும் குளுமையானது; இன்பமானது என்று புகழ்கிருர்களே, அது எவ்வளவு பேதமை!' என எண்ணியபடி தோழியைப் பார்க்கிருள். அவள் அருகில் வருகிருள்.

"தோழி, இந்த நிலவு ஊரைச் சுடுமா? இல்லை உலகைச் சுடுமா? யாரைச் சுடும்? தெரியவில்லையே; ஆனுல் என்னை மட்டும் சுடுகிறதே இந்த நெருப்பு வட்டமான நிலா!"

ஊரைச் சுடுமோ
வுலகந் தனைச்சுடுமோ
ஆரைச் சுடுமோ
வறியேனே—நேரே
பொருப்புவட்ட மானமுலைப்
பூவையரே யிந்த
நெருப்புவட்ட மான நிலா.
—பலபட்டடைச் சொக்கநாதப் புலவர்

திருக்குறள் கழகம்

காரைக்குடி

அன்புடையீர்,

1. மாநில ஓவியப் போட்டி

ஓவியப் போட்டியில் தமிழ்நாட்டு ஓவியர் அனைவரும் கலந்துகொள்ளலாம்.

குறட் கருத்தின் அடிப்படையில் 12" × 10" அளவில் வரையப் பெறவேண்டும்.

முடிவு தேதி : 31-3-61

2. கல்லூரிக் கட்டுரை, கவிதைப் போட்டி

தமிழகக் கல்லூரி மாணவ மாணவியர் அனைவர்க்கும் பொதுவானது. ஒவ்வொரு தலைப்பில் சிறப்பாக எழுதப்பெற வேண்டும்.

முடிவு தேதி : 28-3-61

கட்டுரைத் தலைப்பு : (1) "எடுப்பதூஉம் எல்லாம் மழை"
(2) "வேலன்று வென்றி தருவது"
(3) "வையக அமைதிக்கு வள்ளுவர் வழி"

கவிதைத் தலைப்பு : (1) "இலக்கியப் பூங்கா"
(2) "வள்ளுவன் எங்கே"
(3) "கண்ணின் துனித்தே கலங்கினுள்"

உலகப் பொது அறநூலான திருக்குறளை ஒன்பது ஆண்டுகளாகப் பரப்பி வருகின்ற எங்கள் கழகத்தார், இவ்வாண்டு ஓவியக் கலையை வளர்க்கவும் முனைந்துள்ளோம். தமிழகக் கலைஞர்கள் போட்டியிற் பங்கு கொண்டு பயன் பெற வேண்டுகின்ருேம்.

1. போட்டிக்கு நுழைவுக்கட்டணம் கிடையாது
2. தமிழ்நாட்டில் ஓவியத்தைத் தொழிலாகக்கொள்ளாத இளங் கலைஞர்கள் அனைவரும் கலந்து கொள்ளலாம்.
3. ஓவியங்கள் குறள் அடிப்படையில் 12" × 10" அளவில் வண்ணச் சிறப்புடன் அமைய வேண்டும்.
4. ஒருவர் மூன்று படங்கள் தான் அனுப்பலாம்
5. ஓவியங்களை 31-3-1961-க்குள் செயலாளர் திருக்குறட் கழகம் நவயுகப் புத்தகாலயம், காரைக்குடி-1. என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும்.
6. தகுதி படைத்தவை குறள்விழாவின் ஓவியக் கண்காட்சியில் சேர்த்து மக்கள் பார்வைக்கு வைக்கப்படும்.
7. திருக்குறட்கழகத்தார் தீர்ப்பே முடிவானது.

தங்களன்புள்ள,
நாவுக்கரசன்
மெ. மெ. மெய்யப்பன்
செயலாளர்கள்.

பரிசு நல்குவோர் :
1. அறந்தை அ. அருணுசலம்
2. பழ. சிதம்பரம்
3. அரு. இலக்குவன்
4. சிவ சிவநேசபாண்டியன்

பரிசு விவரம் :
1. பெரிய வெள்ளிக் கோப்பை
2. சிறிய வெள்ளிக் கோப்பை
3. வெள்ளிப் பதக்கமும் ஓவியப் பொருளும்

தனிப் பரிசுகள் : வெள்ளிப் பதக்கங்கள்.

போட்டி இறுதி நாள் : 1961 மார்ச்சு 31

அனுப்பவேண்டிய முகவரி

செயலாளர்
திருக்குறட் கழகம்,
காரைக்குடி-1.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அவள் அவனை ஏமாற்றி வஞ்சித்தது எல்லாம் திரைப்படமாய் அவன் மனக்கண்முன் ஓடியது!

"செல்வம்!..."

திடுக்கிட்டு திரும்பிய அவன் கல்லாய் சமைந்துவிட்டான். காரணம் அவன் சற்று நேரத்திற்கு முன்பு யாரைப் பற்றி நினைத்தானோ, அவள் சோகத்தின் உருவாய் நின்று கொண்டிருந்தாள்.

'கோவைச் சீமானின் செல்வப் புதல்வியாரே! இந்த ஏழையின் கவனம் இன்னும் தங்கள் சிந்தையில் இருக்கிறதா?'-இப்படி கேட்டுவிட துடித்தது அவன் மனம். ஆனால் படிப்பும்பண்பாடும் அவனை பதுமையாக்கி விட்டது.

"செல்வம்! என்னை மன்னித்து விட மாட்டீர்களா?..."

அவள் குரலில் துயரமும் சோகமும் இழைந்திருந்தன.

"மன்னிப்பதா? உன்னையா?... மன்னிக்கும்படியாக நீ ஒரு குற்றமும் செய்யவில்லையே!..." கொதிப்பேறிய குறும்பு மொழியைக் கொட்டினான்.

"நீங்கள் அடைந்த ஏமாற்றம் உங்களை இப்படியெல்லாம் பேசச் சொல்கிறது!"

"ஏமாற்றம் மட்டுமில்லை! துரோகம்-நம்பிக்கைத் துரோகம்!"

"ஏன் செல்வம் இப்படியெல்லாம் பேசுகிறீர்கள்?..."

"பின் எப்படி பேசுவது?... கண்ணே! மணியே! என்று கொஞ்சிக் குலவிவிட்டு, ஊருக்குப் போனதும் தரத்திற்கு ஏற்ற ஒருத்தியை மணந்து கொள்ளுங்கள் என்று பணத்திமிரால் ஆணவமாக எழுதியிருந்தாயே அதை எப்படி மறப்பது?..."

"இன்னமும் என் உள்ளத்தை நீங்கள் புரிந்து கொள்ளவில்லையே!"

"இனி உன் உள்ளம் எனக்கு புரிந்தால் என்ன? புரியாவிட்டால் என்ன?...எனக்கு திருமணமாகி குழந்தையும் பிறந்து விட்டது!"

"என்ன?...உங்களுக்கு மணமாகி விட்டதா? அய்யோ! செல்வம்!...இதைக் கேட்கவா நான் ஓடோடி வந்தேன்!...என் ஆசைக் கனவுகளைக் குழிதோண்டிப் புதைக்கவா நான் இங்கு வந்தேன்!..."

அவள் புலம்பினாள். நிற்க மாட்டாதவளாய் அப்படியே அமர்ந்து விட்டாள் துன்பமிகுதியால். அவனுக்கு ஒன்றுமே புரியவில்லை.

"அல்லி! என்ன இதெல்லாம்? எனக்கொன்றுமே புரியவில்லையே!"

அவன் பதறிப் போய் கேட்டான்.

அவள் பதில் பேசவில்லை. புலம்பல் சற்றே ஓய்ந்து விம்மல்தோன்றியது. இதற்கிடையில் காற்று வாங்க வந்த கூட்டத்தினரில் சிலர் இவர்களை கண்காணிக்கத் தொடங்கி விடவே, அவன் மெல்லிய குரலில்,

"அல்லி!... ஏன் இப்படி அழுகிறாய்? யாராவது எதையாவது நினைத்துக் கொள்ளப் போகிறார்கள்?...எனக்குப் புரியும் படியாகத் தான் சொல்லேன்..." என்று கெஞ்சினான்.

"உங்களுக்கு இனி புரிவதைவிட புரியாமலிருப்பதே நல்லது! நான் வருகிறேன்."

அவள் எழ முயன்றாள். அவன் தடுத்தான்.

"முடியாது அல்லி! உன்னைப் போகவிட மாட்டேன்?...நீ காரணத்தைக் கூறித்தான் ஆக வேண்டும்!..."

"செல்வம்!... என்னைப் போக விடுங்கள்!"

"முடியாது அல்லி. முடியாது!"

"ஐயோ!... செல்வம்!... ஏன் இப்படி பிடிவாதம்செய்கிறீர்கள்?... உங்கள் விருப்பப் படியே கூறிவிடுகிறேன். ஆனால் நீங்கள் எனக்கு ஒரு வாக்கு தரவேண்டும்."

"வாக்கு தரவேண்டுமா?..."

"ஆம்! நான் கூறுவதைக்கேட்டு கலங்காமல் இருப்பேன் என்று உறுதிமொழி தரவேண்டும்...நான் கூறப் போகும் கதை உங்கள் மண வாழ்வில் எவ்வித மாறுதலையும் உண்டாக்காது என்று உறுதி தர வேண்டும்! செய்வீர்களா?"

"என்ன அல்லி! எதையெதையோ சொல்லி என் மூளையைக் குழப்புகிறாய்? சரி. உன் எண்ணப்படியே ஆகட்டும். நடந்ததைச் சொல்லு."

"செல்வம்!...இங்கு நான் எதற்காக ஓடி வந்தேன் தெரியுமா? உங்களை மணந்து கொள்ளும் ஆசையோடும், பெற்றோரின் அனுமதியோடும் ஓடிவந்தேன்!..."

"அல்லி! என்ன உளறுகிறாய்? 'தரத்திற்கு ஏற்ற ஒருத்தியை மணந்து கொள்ளுங்கள்' என்று நீதானே எனக்கெழுதியிருந்தாய்?'

"ஆம் நான்தான் எழுதியிருந்தேன்! ஏன் தெரியுமா? என் பெற்றோர்களின் சூழ்ச்சி என்னை அப்படி எழுதத் தூண்டியது!"

"உன் பெற்றோரின் சூழ்ச்சியா? புரியும்படியாகத் தான் சொல்லேன்."

"ஆம், சூழ்ச்சிதான்! உங்களைப் பிரிந்து ஊருக்குப் போனேன். உங்களைப் பற்றி என் தாயிடம் கூறினேன். அவள் என் தந்தையிடம் சொன்னாள். ஆனால் அவரோ பணம் அந்தஸ்தில் மிகுந்த நம்பிக்கையுள்ளவர். நம் காதல் மணத்திற்குத் தடை விதித்தார். மணந்தால் உங்களையே மணப்பேன் இல்லாவிட்டால் கன்னியாகவே காலங் கழிப்பேன் என்று பிடிவாதம் செய்தேன். என் முயற்சி பலனளித்தது! என் தந்தை உங்களை மணந்து கொள்ள அனுமதியும் தந்தார்! ஆனால் ஒருநாள் அவர் கூறிய செய்தி என்னை அணுவணுவாய்க் கொன்றது. நான் திருமணம் செய்து கொள்வது என் உயிருக்கே ஆபத்தாய் முடியுமென்றார்! பணத்திற்கு ஆசைப்பட்டு ஒரு டாக்டர் என்தந்தையின் சூழ்ச்சிக்கு இரையாகி பெரும் பொய் ஒன்றைச் சொல்லி என்னை வஞ்சித்தார்! நான் துடித்தேன் துவண்டேன்! வாழ்ந்தால் உன்னோடு வாழ்வேன்; இல்லாவிட்டால் உன் நினைவால் அணுவணுவாய் மடிவேன்! என்று புகைவண்டி நிலயத்தில் என்னைவழியனுப்பியபோது நீங்கள் சொன்ன வார்த்தைகள், என் இதயத்தைச் சம்மட்டி கொண்டுதாக்கின! என் உண்மை நிலையை எடுத்துச் சொன்னால் உங்கள் பொன்னான வாழ்வு பாழாகலாம் என்ற பயம் ஏற்பட்டது! உங்களுக்காக என் வாழ்வைத் தியாகம் செய்ய எண்ணினேன். அதனால்தான் உங்கள் மனம் என்னை வெறுத்து ஒதுக்கி விட்டு வேறொருத்திக்கு மாலை சூட்டி விட்டீர்கள்! இதற்கிடையில்தான் என் தந்தையின் சூழ்ச்சி அம்பலமாகியது! எனக்கு பெரியதோர் இடத்திலே திருமணம் செய்விக்க முயற்சிகள் செய்தார். கேள்விப்பட்ட நான் வேண்டாம் என்று தடுத்தேன். இன்னொருவர் வாழ்வை நான் ஏன் நாசமாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்!...என் தந்தை என்னைப் பார்த்துச் சிரித்தார்!...நீ அந்த ஏழையை மறந்து விடவேண்டும் என்பதற்காகத்தான் அப்படி பொய் சொன்னேன். இந்நேரம் அவன் எவளையாவது மணந்து கொண்டு குழந்தையும் குட்டியுமாய் இருப்பான்! நம் தகுதிக்கு ஏற்ற மாப்பிள்ளை கிடைத்து விட்டான்! என்று கூறி தன் சூழ்ச்சியை அம்பலப்படுத்தினார்! செல்வம் அப்போது என் நெஞ்சு அனுபவித்த வேதனையை வெறும் வார்த்தைகளால் சொல்ல முடியாது! என்னைப் பெற்றவரே எனக்குத் துரோகம் செய்ததை என்னால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை!

'அப்பா! உங்கள் மகளுக்கு இனி மணமாகாது! விடிந்தால் பிணமாகி விடுவாள்! என்று நான் ஆவேசம் பிடித்தவளாய் கத்தினேன். என் தந்தை பயந்து விட்டார்...என் தாய் பதறிவிட்டாள்... தான் செய்த தவறுகளுக்கெல்லாம் பிராயசித்தமாக தங்களை மணந்து கொள்வதற்கு அனுமதியும் தந்தார் நான் இங்கே ஓடிவந்தேன் ஆசையாக... ஆனால் விதி என்னைச் சதி செய்து விட்டது...."

விழிகளைத் துடைத்துக் கொண்டு அவள் எழுந்தாள்.

"ஐயோ! அல்லி!...நீ பெண அல்ல! தெய்வம்! ஆம். தியாகத்தின் சின்னம்! உன் மாசற்ற காதலைக் கொன்ற பாவி நான் எந்த விதத்திலும் உனக்கு ஏற்றவனல்ல! என்னை மன்னித்து விட மாட்டாயா?..."

அவன் கன்னங்களின் வழியாக வழிந்தகண்ணீர் அவன் அணிந்திருந்த சட்டையின் ஒரு பகுதியை நனைத்தது. அவள் எழுந்தாள்.

"அல்லி! என் ஆசையை நிறைவேற்றுவாயா? மலர்ந்து மணம் வீச வேண்டிய உன் வாழ்வு, அரும்பிலேயே கருகி விடக் கூடாது! உன் தந்தையின் விருப்பப்படியே அந்த வரனை மணந்து கொண்டு, என் பாவத்தைக் கழுவிவிட மாட்டாயா?..."

அவன் கெஞ்சினான் அவள் கால்களைப் பிடித்துக் கொள்ளாத குறையாக.

"திருமணமா? ... எனக்கா? வாழ்ந்தால் உங்களுக்காக வாழ்வேன்; இன்றேல் உங்கள் நினைவால் அணு அணுவாய் மடிவேன் என்ற முடிவோடுதான் வந்தேன், ஆனால் என் இடத்திலே என் சகோதரி என்பதைத் தெரிந்து கொண்டதும் போகிறேன்!"

அவள் சாலையை நோக்கி நடந்தாள் எதையோ தியாகம் செய்து விட்டவளைப் போல!

"அல்லி!..."

நெஞ்சைப் பிழியும் வேதனையோடு அவன் அவளை அழைத்தது, அவளுடைய காதில் விழுந்தால் தானே?

வெண்பாப் போட்டி

15. வேலூர் என தொடங்கி திருவொற்றியூர் என முடிக்க.

வேலூர் தனில்பிறந்த வேதனைசேர் சச்சரவால்
ஆலைக் கரும்பாய் அகம்நலிந்(து)—ஓலமிட்டு
நீருகுத்து வாடிநின்ருர் நெஞ்சம் மகிழவைத்த
ஊரே திருவொற்றி யூர்!

—பத்மா, சென்னை-12

வேலூர் நிகழ்ச்சிகளின் வேதனையைத் தீர்த்திடவும்
வேலி அமைத்துவைத்து விந்தையுடன்—வாழ்த்திடவும்
வென்றே எதிரிகளை வெந்காட்டச் செய்திடவும்
சென்ருேம் திருவொற்றி யூர்.

—வெளிவை சு. இளவழகன், நாகப்பட்டினம்.

வேலூர் நிகழ்ச்சி விளைத்திட்ட வேதனையைச்
சீலமிகும் அண்ணுவும் சம்பத்தும்—தாழாமல்
பாங்குடன் மாற்றிப் புகழ்வளர்த்த நல்லிடமே
ஓங்கும் திருவொற்றி யூர்!

—ப. அ. இசுமாயில், திருப்புத்தூர்.

வேலூர் விளைத்திட்ட வேதனையின் வேரறுத்து
மேலோர் மகிழ்வெய்த மேம்பட்டாய்—ஞாலத்தே
நீங்காப் புகழோடு நின்று வரலாற்றில்
ஓங்கும் திருவொற்றி யூர்.

—கி. பெ. அம்சவேணி, சித்தேரி.

வேலூர் பொதுக்குழுவின் வேதனைக் கட்டங்கள்
தாலாட்டி கொஞ்சுகின்ற தாய்கோபம்—போலாகி
'அண்ணு வழிநிற்போம்' என்றஒலி ஆர்த்துயரக்
கண்ட திருவொற்றி யூர்.

—ஆம்பற்கிழான், கரந்தை.

வேலூர் புகைத்த வினையைத் திருச்சியால்
மேலூர்ந் தெரிந்ததை மெய்யெனும்—பாலாலே
ஆங்கவியச் செய்துநல் அன்புநலம் மீட்டதே
ஓங்கு திருவொற்றி யூர்!

—டி. கே, விசுவநாதன். சூரமங்கலம்.

வேலூர் விதைத்தவிதை வேடிக்கை யாய்முளைத்து
பாலூறும் நெஞ்சம் பதைபதைக்கும்—காலையிலே
அன்புக் கரம்நீட்டி அண்ணு அணைத்தளித்த
இன்பம் திருவொற்றி யூர்.

—மதிஒளி, சென்னை-5.

வேலூர் பொதுக்குழு வேதனை கண்டிட
பாலூண் கசந்து படுத்தேனே—கோலூன்றி
நின்றது வேதனை நீங்கியதன் வெற்றிக்குக்
கண்டேன் திருவொற்றி யூர்!

—எஸ். கே. வெங்கடேன், சென்னை-7.

வேலூர் விளைவித்த வேதனையும் தீர்ந்ததுகாண்,
ஆலாய்த் தழைத்தோங்கு நம்கழகம்—வேல்விழியே!
அண்ணு பிணைத்துவைத்த அன்புநற் பாசத்தால்
கண்டோம் திருவொற்றி யூர்!

—குமர நடராசன், மணக்கரை.

வேலூர் நமக்களித்த வேற்றுமையை வேருக்கிப்
பாலூற்றிக் காத்துயர் பாசமெனும்—காலூன்றி
என்றும் கழகம் எழில்பெற்று வாழுதற்கே
சென்ருேம் திருவொற்றி யூர்!

—கு. சூத்தரசன், சத்திரம்கருப்பூர்.

வேலூர்க் குழுவிலுற்ற வேதனைப் புண்ணடுவே
வேல்பாய்ச்சி விட்ட விதம்திருச்சி—மேலுறுமுன்
நீதி வழுவா நெறிவழங்கிக் காத்ததே
தீதில் திருவொற்றி யூர்!

—சா. கா. சாகுல்அமீது, சித்தையன்கோட்டை.



மாவீரர் மறைந்தார்

இந்திய அரசாங்கத்தின் உள் துறை அமைச்சர் பண்டித கோவிந்த வல்லப பந்த் 7-3-61-ம் நாள் காலை 8-50 மணியளவில் காலமானுர் என்ற செய்தி கேட்டு வருந்துகிருேம்.

வட இந்தியாவில் உத்தரப் பிரதேச ராஜ்யத்தில் அல்மோரா மாவட்டத்திலுள்ள 'கண்ட்' என்னும் சிற்றூரில் பாஃகாரி பார்ப்பனப் பெருங்குடியில் தோன்றியவர் திரு. பந்த்.

1908-ல் அவர் பட்டதாரியானுர், பின்பு திரு. கோபாலக் கிருஷ்ண கோகலேயின் சீடரானுர்.

அல்மோராவில் சிலகாலம் வழக்கறிஞராகத் தொழில் புரிந்தார்.

1916-ல் காங்கிரசில் சேர்ந்தார். 1920-ல் காந்தியாரின் கட்டளைக்கிணங்க வழக்கறிஞர் தொழிலை உதறி எறிந்தார்.

1928-ல் நடந்த சைமன் குழு புறக்கணிப்பின் போது, பண்டித நேருவின் மீது பாய்ந்த குதிரைப் பட்டாள வீரனிடமிருந்து காப்பாற்றி தடியடியையும் விலக்கி நேருவை அண்டையிலிருந்த தொண்டர்களிடம் ஒப்புவித்து தூக்கிக் கொண்டு ஓடிவிடும்படி செய்தார்.

இதனுல், போலீசாரின் ஆத்திரம் திரு. பந்த் மீது திரும்பியது. அதன் பயன் பலமான தடியடி.

அதன் பிறகு திரு. பந்த் பலமுறை சிறை சென்றிருக்கிருர்.

1930-32-ம் ஆண்டுகளில் நடைபெற்ற அறப்போர்களினுல் இரு முறை சிறை சென்ருர்.

1940-ல் தனியார் அறப்போரில் ஈடுபட்டு ஓராண்டு சிறைத் தண்டனை அடைந்தார்.

தொடர்ந்து 'இந்தியாவைவிட்டு வெளியேறு' என்று தொடங்கிய உரிமை முழக்கப் போரில் ஈடுபட்டார்.

9-8-1942-முதல் 1945 கோடைவரை ஆமத் நகர் கோட்டையில் சிறைப் பட்டிருந்தார்.

பதவி ஏற்புகள்

1923-ல் அவர் உத்தரப் பிரதேசக் கவுன்சில் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1937-ல் உத்தரப் பிரதேசத்தில் முதல் காங்கிரசு அமைச்சரவையில் முதல் மந்திரியானுர்.

1946-ல் இந்தியாவின் அரசியல் நிர்ணய சபைக்கு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதே நேரத்தில் உ. பி. முதன் மந்திரியாகவும் இருந்தார்.

1954-ல் அவர் இந்திய அரசாங்கத்தின் உள்துறை அமைச்சரானுர்.

அவர் மற்றும் பல காங்கிரசு இயக்கப் பதவிகளில் இருந்திருக்கிருர்.

சுமார் 45 ஆண்டு காலம் பொது வாழ்வில் ஈடுபட்டு இடையீடின்றி இன்பத்தையும் துன்பத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்ட முது பெருங் கிழவர்.

அவருடைய உள்ளம் தெளிவானது தீர்க்கமானது நிலைகுலையாதது.

ஏக இந்தியாவிலும் இந்தி மொழி அரசாண்டு வரத்தக்க வகை செய்ய வேண்டும் என்பது அவரது கனவு.

வழா வழா கொழா கொழா என்று பேசுவது எப்போதும் அவருக்குப் பிடிக்காது.

அவருடைய துணிவான ஆணித்தரமான பேச்சுக்கள். அவருடன் கருத்து மாறுபாடு கொண்டவரிடத்திலும் அவருக்கு ஒருவித நன்மதிப்பைவளர்த்துவிடும்.

அத்தகைய உண்மை பேசும் திண்மையாளன்-முன் வைத்த காலைப் பின் வைக்காப் போர் மீளி, சலியாத பெருந்தொண்டன். காலத்தின் பிடியிலே சிக்கி இயற்கையுடன் இணைந்துவிட்டார். அவரது கொள்கைகள் எவ்வாறிருப்பினும் அவரது சீரிய பண்புகளில் வசப்படாதவர் இரார். அவரது மறைவால் வருந்தாதவர்-இரார். அவரை இழந்து தவிக்கும் குடும்பார்த்தாருக்கும் நாட்டினர்க்கும் நமது ஆழ்ந்த இரக்கம் உரியதாகுக.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர் : இராம. கிருட்டினன், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு, தொலைபேசி எண் 83510.